1649

1649

மலர் 2.

முருகன் துணை

சகல நாடகக் கம்பெனியார்களும் பாடி நடித்துவரும்

# நல்லதங்கை சரித்திரம்

சென்னை: ஸ்ரீ பாலவிநோத நாடக சபாவின் உபாத்தியாயர்

நாடகாசிரியர்: ச. சு. சங்கரலிங்கக் கவிராயர் அவர்கள் இயற்றியது.



P. S. வேலு நாயர் - நல்லண்ணன்.

சென்னை:

நாயகர் ஸன்ஸ் பதிப்பு.

1932.

[விலை 0-6-0.

O-,2MSL7,N
x132
17O275

உ

முருகன் துணை

K. S. செல்லப்பா அய்யர், K. S. அனந்தநாராயண அய்யர்,

S. V. சுப்பைய பாகவதர், P. S. வேலு நாயர்,

ஆலந்தூர் கம்பெனியார்,

ஸ்ரீ பால விநோத நாடக சபையார் முதலிய

சகல நாடகக் கம்பெனியார்களும் பாடி நடித்துவரும்

# நற்குலசேகரி

அல்லது

# நல்லதங்கை சரித்திரம்

(இரண்டுபாகங்கள் அடங்கியது)

உடுமலை: ஸ்ரீமான் சரபகவி மாணவரும்

சென்னை: ஸ்ரீ பால விநோத நாடக சபாவின் உபாத்தியாயருமான

பரத சாஸ்திர சங்கீத சாஹித்திய சந்தவண்ணச் சரபம்

நாடகாசிரியர்:

ச. சு. சங்கரலிங்கக் கவிராயர் அவர்களால்

இயற்றப்பெற்றது.

பிரசுரித்தவர்கள்:

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,

திருமகள்விலாச அச்சியந்திரசாலை,

சென்னை.

காபிரைட்] 1932 [விலை அணா 6.

# முகமலர்

"நல்லதங்காள்" என்னும் பெயர் புனைந்த இத்தமிழ் நாடகம் நம்மிந்திய சகோதர சகோதரிகளுக்கு நற்குண நற்செய்கையைப் புகட்டும் ஓர் நந்நூலாகும். இக்கதையை நங்கைக் கதைக்கொப்ப ஸ்ரீமத் புகழேந்திப் புலவரவர்க ளியற்றினரெனக் கூறுதல் பொருந்தாதென்பதை விரித்தெழுதப் பெருகும். எங்ஙனமாயினும் இக்கதையைத் தத்ரூபமாக அதாவது முந்நாளில் நடந்ததென்பதற்கொப்ப நாடக வாயிலாக முதன்முறையாய் ஆலந்தூர் கம்பெனியார்கள் இரண்டு பாகமாக நடத்திக் காட்டினரென்பது பிரசித்தம்.

பின்னர் இக்கதை ஓரிரவில் ஒருபாகமாக நடத்தும் சீர்திருத்தம்பெற்று வெகுகாலம் புகழோங்கி நடந்துவந்தது. எனினும் தற்காலம் தமிழ் நாடக நடிகர் இக்கதையைப் பெரிதும் நடத்துவதைக் காணோம். நாவல்கள் மலிந்தகாலம் நல்லதங்கை நாடகம் செல்லாது எனப் பல நாடகாபிமானிகள் பேசிவருவதைக் கேட்ட யான் எனது தலைமையின்கீழ் நடந்துவரும், சென்னை: ஸ்ரீ பால **விநோத நாடக சபா** பாலியர்களுக்கு இக்கதையை நடத்தும் பலனைப் போதித்து நடத்திகாட்டச் செய்து நற்பெயர் வகித்தனன். நமது பாலியர்கள் நடத்திய முறைப்படியே இந்நூலை அச்சிட்டுத் தரவேண்டுமெனப் பல நாடகாபிமானிகள் கோரியதினிமித்தம் இக்காலம் இச்சரிதையை வெளியிடலானேன்.

இதற்குமுன் பலவித பெயர் புனைந்த நல்லதங்கை சரித்திர நாடகங்கள் வெளிவந்திருப்பினும் அப்புஸ்தகங்களுக்கும் இப்புஸ்தகத்திற்கும் மிக்க வேறுபாடிருக்கும். காரணம் இக்கதையில் காணும் பல பாடல்களும் பல நடிகர்களால் பாடப்பெற்று பகிரங்கமானது. இடையில் தற்காலத்திற்கேற்ற வசன காவியங்களுடன் என்னால் எழுதிய புதிய வர்ணமெட்டுகளமைந்த பாடல்களமைத்தும் வெளியிட்டிருக்கிறேன். பாடல்களின் முகப்பில் இன்னின்னாராலெழுதிய பாடலிதுவென்பதையுங் குறிப்பிட்டிருக்கிறேன். எனவே இந்நூல் நாடக முறைப்படி பரிமளிக்கும் என்பதுண்மை.

இந்நூலின் சகல வுரிமைகளும், சென்னை: மெஸர்ஸ் B. இரத்தின நாயகர் அண்டு ஸன்ஸ் அவர்களுக்கே வுரியதாதலின் மற்றவர்கள் இப்புத்தகத்தையேனும், இதிலுள்ள பாடல்களையேனும் வெளியிடில் புஸ்தக ரிஜிஸ்டர் சட்டப்படி சகல நஷ்டத்திற் காளாவார்களென்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

16-9-32
சென்னை.

அன்பன்:
**ச. சு. சங்கரலிங்கன்.**
நாடகாசிரியன்.

**Copy Right and Rights of Translation in any other Languages, strictly reserved by the Publishers.**

# நாடக நடிகர்கள்:

| | |
|---|---|
| நல்லதங்கை | கதாநாயகி |
| காசிராஜன் | ஷை யார் கணவன் |
| ஞானசேகரன் | ஷை யாரின் மூத்தமகன் |
| நல்லண்ணன் | கதாநாயகியின் தமையன் |
| அலங்காரி | நல்லண்ணன் மனைவி |
| காவலன் | அரண்மனை விதூஷகன் |
| வேடன் | கானகவாசி |
| இடையர் | நகர வாசிகள் |
| பார்வதி<br>நாராயணி | } அயல்வீட்டுப் பெண்கள் |
| நல்லக்கண்ணு | நல்லண்ணன் மகன் |
| பரியாரி | அரண்மனை வேலைக்காரன் |
| வண்ணான் | ஷை வேலைக்காரன் |
| பரமசிவம் | உலக ரக்ஷகன் |
| குடி ஜனங்கள்<br>விறகு தலையன்<br>வாணியன்<br>புரோகிதன் | } சகுன தாரிகள் |

பந்து ஜனங்கள், ஆறு பிள்ளைகள் முதலியோர்.

நாடகம் நிகழிடம்:

**வடமதுரையும், அதற்கடுத்த கானகமும்.**

உ

முருகன் துணை

# நல்லதங்கை சரித்திரம்

## விநாயகர் துதி

### விருத்தம்

நல்லதோ ருலகுக் கெல்லாம் நல்லதங் காளென் றோதும்
செல்விதன் சரித்தி ரத்தை செந்தமி ழாலே சொல்ல
கல்வியின் பொருளாய் நின்று கணபதி எனும்பேர் கொண்ட
வல்லபை மூர்த்தி எந்தன் மனதிருந் தெழுது மாதோ.

**சீன்-1.** **இடம்-தர்பாரின் அந்தப்புறம்.**

**நடிகர்:—நல்லதங்கை, ஏழுபிள்ளைகள், காசிராஜன்.**

[பிள்ளைகளெழுவரும் தாயிடம் சொல்வது]

### பாட்டு

(மதனகுணளனே என்ற மெட்டு)

பல்லவி

பசியுமெடுக்குதம்மா பாலமுது கொடம்மா

அநுபல்லவி

கசியுதே எங்கள்மனங் கண்கள் சுழலுதம்மா
ருசிகரமான பால் தருவாய்
தருவாய் தருவாய் (பசி)

சரணம்

சோறுதே தேகமெல்லாம் சோருக்கித் தாருமம்மா
பாருமுந்தன் பாலரின் முகமே
முகமே முகமே (பசி)

ஞானசேகரன். வ-ம்:—அம்மா! பசி பொறுக்கக் கூடவில்லையே; காதடைக்கிறதே; தேகமெல்லாம் சோர்வடைகிறதே; சோறாட்டக்கூடாதா; சிறிது பால் கொடுக்கக் கூடாதா அம்மா! அம்மா!! அம்மா!!!

நல்லதங்கை. வ-ம்:—குழந்தைகாள்! உங்களது பிறப்பின் ஜாதகானுசாரபலன் இப்படியிருக்கிறது. பாவி என் வயிற்றில் ஏனோ வந்து பிறந்தீர்கள். சாதாரணமான ஓர் ஏழையின் வீட்டில்

ஜெனித்திருந்தாலும் எவ்வளவோ செல்வாக்குடன் இருப்பீர்களே. அடா என் கண்மணிகளே!

## பாட்டு

(சாமியேதையா என்ற மெட்டு)

இராகம்-பூரிகல்யாணி, தாளம்-ரூபகம்.

பல்லவி

தந்தைவருவார் பொறுத்துக்கொள்ளுங்கள்
தனையரே என்னசெய்யலாம்

அநுபல்லவி

சிந்தைக்கலங்கித் தியங்கவேண்டாம்
சீக்கிரம் அன்னமுண்ணலாம் (தந்)

சரணம்

அந்தநாளிலரசராய் வாழ்ந்திட்டோம்
ஆறிரண்டாண்டுபஞ் சத்தினுலாழ்ந்திட்டோம்
சொந்தமான ஆஸ்தி யாவுமிழந்திட்டோம்
சோற்றுக்குந்துட்டுக்குந் துன்பமடைந்திட்டோம் (தந்)

வ-ம்:—குழந்தைகளே! 12-வருஷமாக நம் நாட்டில் மழையில்லாமல் பஞ்ச மதிகரித்ததினுல், இந்தக் கஷ்டம் நமக்கு நேர்ந்தது. தெய்வத் திருவிளையாடலுக்கு நாமென் செய்யலாம். இதோ உங்கள் பிதா வரும் சமயமாயிற்று சற்றுப் பொறுங்கள். பசியாறச் செய்கிறேன்.

[காசிராஜன் உள்ளிருந்து வரக்கண்டு நல்லதங்கை நமஸ்கரித்து நிற்கின்ருள்]

## காசிராஜன் விருத்தம்

சூழ்ந்ததோர்பஞ்சம்நம்மைத் துயரத்துக்காளதாக்கித்
தாழ்ந்திடச்செய்வதாலே தனையர்களெழுவரோடு
வாழ்ந்திடவகையுமில்லை வந்தயிவ்வருத்தம்நீங்க
ஆழ்ந்தொருவிதமெனக்கு அறிவிக்கவேண்டுமாதே.

## காசிராஜன் பாட்டு

(எதினிசெய்குவோம் என்ற மெட்டு)

இராகம்-சாவேரி, தாளம்-ஆதி.

பல்லவி

இனியென்னசெய்குவோம் எவ்விதமுய்குவோம்
எங்கிவருந்தலானேம் எனதுகண்ணே (இனி)

அநுபல்லவி

பனிரெண்டு வருஷமாய் பாரில் மழையில்லாமல்
பஞ்சம் பரவினதே பதிஜனம் போயினதே (இனி)

சரணம்

காட்டில் விரகொடித்துக் காலங்கழித்து வந்தோம்
கையிலுள்ள பொருளைக் காசுமாறி பிழைத்தோம்
நாட்டில் மழையில்லாமல் நமதுகுடிகளெல்லாம்
வீட்டைவிட் டேகினரே மெல்லியாளே இனிமேல் (இ)

வ-ம்:—குலசேகரி! பஞ்சத்தின் கொடுமை சகிக்கக்கூடவில்லை. ஊரிலுள்ள குடி ஜனங்களெல்லாம் பரதேசிகளாகிப் பதிகடந்தனர். எத்தனை நாளைக்குக் காட்டில் விரகொடித்து விற்று ஜீவிப்பது. பால்மணமாறாத குழந்தைகளும் பசியால் வாடி வதங்கலாயினர். இனிமேல் என்செய்வது?

## நல்லதங்கை பாட்டு

(நிச்சயமாய்த்தீர்க்க என்ற மெட்டு)

இராகம்-தன்யாசி, தாளம்-ஆதி.

பல்லவி

மனதிற்கலக்கம்வேண்டாம் மன்னவாநான்சென்றுவாரேன்
மங்கைக்கு விடைதருவீர் (மன)

அநுபல்லவி

எனதுடனே பிறந்த எந்தன் பெயர்க்குகந்த
தனதொரு அண்ணன்மனை தானே சென்றுவருவேன் (மன)

சரணம்

பொல்லாத பஞ்சகாலம் வல்லாண்மையாகவந்து
புகுந்ததோர் துன்பம்விலக
நல்லோர்புகழு மைந்தர் நன்மை மிகப்பெருக
வில்லார் புஜபலனே விசனமது தணிய (மன)

வ-ம்:—பிராணேசா! நான் என்ன யோசனைசொல்வது? யோசனை செய்வதில் பிரயோசனமில்லை. இனி இவ்விடத்திலிருப்பதால் மிக்க கஷ்டமடைய நேரும். இதற்கு முன் நான் பன்முறை தங்களிடம் சொல்லியும், தாங்கள் கவனிக்கவில்லை. தாங்களும் என்னுடன் வாருங்கள். எனதண்ணன் நல்லண்ணன் வாழும் மதுரைமாநகர் சென்று சுகமாயிருந்து பஞ்சமகற்றி வரலாம்.

## காசிராஜன் விருத்தம்

பஞ்சத்தாலலேந்துவாடி பரதேசிகோலமாகி
சஞ்சலமிகவேகொண்டு தமையன்வீடேகலாமோ
பஞ்சொத்தபாதம்நோக பாலர்களெழுவரோடு
நஞ்சொத்தஅண்ணன்வீடு நடந்திடவேண்டாம் கண்ணே.

## பாட்டு தர்க்கம்

(மாயப்புரவி என்ற மெட்டு)

இராகம்-ஆனந்தபைரவி, தாளம்-ரூபகம்.

காசி. சொல்லுமென்வார்த்தை தடுக்காதே மடமாதே-உந்தன்
சொந்தஅண்ணன்வீடென்று சொல்லிச்சொல்லாதே
இளங்கோதே

நல். வல்லவாயென்பிராண நாதா மலர்ப்பாதா-இங்கு
வந்தபஞ்சம்விலக சென்றுநான் வருவேன்
சுகம் பெறுவேன்

காசி. வ-ம்:—குலசேகரி! எல்லாம் தெரிந்த நீ இவ்விதம் பேசுவதாகாது. வறுமை வந்த காலத்தில் பெருமையுடையவர் வீட்டுக்குப் போவதால், சிறுமையே தவிர உரிமையாகாது. தமையன் வீடானுலென்ன தமக்கைவீடானுலென்ன.

பாட்டு (ஷை மெட்டு)

காசி. தாயில்லாவீடு செல்லலாமோ சரியாமோ-உன்றன்
தமையனென்றாலும்பெற்ற தந்தைக்கொப்பாமோ
போகலாமோ

நல். அண்ணன்மனேவி யலங்காரி உபகாரி-என்னை
ஆதரிப்பாளேசொந்த தாயைப்போல்கோரி
சுகுமாரி

நல். வ-ம்:—நாதா! என் தமையன் மனேவி அலங்காரி மிகவும் நல்ல குணமுடையவள். மாலை சூடிவந்த நாளாக நான் இதுவரை அங்கு போகவில்லை. எனது குழந்தைகளுடன் இப்போதங்கு சென்றால், என்னை வெகு அன்புடன் உபசரிப்பாள். வீணுகத் தடுப்பதில் பலனில்லை. விடை கொடுக்கவேண்டும்.

காசி. வ-ம்:—குலசேகரி! தமையனும் நல்லவனே. தமையன் மனேவியும் நல்லவளே. நமது காலபலன் நல்லதாயில்லை. ஆதலின், அவர்களுக்கு நம்மீது கருணையுண்டாகாது. அன்றியும், இக் காசிமாநகரை அரசாக்ஷிசெய்து மகா வுன்னத நிலைமையில் வாழ்ந்துவந்த நாம் பஞ்சத்தால் இந்தக் கெதியாகி சொந்த பந்து

சுற்றத்தார் வீடு செல்லக்கூடாது. இதை நன்ரு யோசிக்க வேண்டும் பெண்ணே! நமது குழந்தைகளுடன் வேறெந்த நகரமாவது சென்று ஜீவிக்கலாம். இது மிகவும் உத்தமம்.

நல். வ-ம்:—பிராணேசா! அன்னியரிடத்தில் யாசகம் வாங்கி வயிறு வளர்ப்பதைவிட பந்துக்களிடத்தில் பணிவிடைசெய்து ஜீவிக்கக் கூடாதா?

## காசிராஜன் விருத்தம்

சொன்னதோர்வார்த்தைமீறித் தோகையேசெல்வாயானல்
பின்னமேநேருங்கண்டாய் பெரும்பழிசூழும்பின்னல்
தன்னுடன்பிறந்ததம்பி தமையனென்ருலும்பெற்ற
அன்னையில்லாதவீட்டுக் கன்னமேபோகொணுதே.

வ-ம்:—பெண்ணே! உலகத்தில் வாழ்வு தாழ்வென்பது சகஜம்; மேலும் இல்லறவாசிகட்கு சதிபதி ஒற்றுமையே சாலச்சிறந்தது. ஆகவே பதிவார்த்தை தவராது நடப்பதே பாவையர்க்கழகு. எதுவோ நமது நன்மையை நாடி நான் தெரிவிப்பதைத் தடுத்துச் செல்வாயாகில் துன்பத்துக் காளாவாய் என்பதுண்மை. சற்றிதை கவனிக்கவேண்டும்.

நல். வ-ம்:—இனி நான் தங்கள் வார்த்தையைக் கவனித்ததன்படி நடப்பேனுகில் பசிப்பிணி தாளாது; பாலர்கள் மடிவாரென்பது திண்ணம். தவிரவும் நான் பிறந்த இடத்திற்குப் போவதால் எனக்கொரு கெடுதியும் நேராது. தங்களுக்கு வரப் பிரியமில்லையானல் சந்தோஷமாக இங்குதானிருங்கள். நான் போய் வருவதற்காகத் தாங்கள்,

### தர்க்கம் (சூதுவாதுகள் தெரியாத என்ற மெட்டு)

நல். எதுவாதுகள் பேசுநீருமக் கேற்குமோ மனங்கேழ்க்குமோ
மாதுநானிங் கிருந்திடத்துயர் மாறுமோ பஞ்சந்தீருமோ

காசி. நாதனற்ற அனுதைபோல்மனை நாடியேமுனம் வோடியே
வாதனைப்பெறலாகுமோ அடி வஞ்சியே அபரஞ்சியே

நல். தமையன்வீடது செல்வதாலென்ன தாக்ஷியோ ஒருசூக்ஷியோ
சமயமேவிடை தந்தருளேந்தன் சாமியே துரைசாமியே

காசி. விடைகொடுத்திட பதருதேமனம் விண்மணி அடிகண்மணி
தடைகொடுத்திட சகுனமானதே தானிதோ எதிர்பாரதோ

காசி. வ-ம்:—குலமசேகரி! உனக்கு விடைகொடுத் தனுப்பவும் என் மனம் துணியவில்லை. நீயோ பிடிவாதமாகப் பேசுகிருய்; அதற்

கேற்றபடி அதோ பார் அவசகுனமும் தோற்றுகிறது. மாத ரசே! விபரீதவினைக் கா்ளாகாது இவ்விடத்தில்தானே இருந்து விடு.

நல். வ-ம்:—இன்னமும் தாங்கள் இவ்விதம் என்னைத் தடுப்பது கூடாது. என்னவரினும் சரி; கட்டாயம் நான் மதுரைமாநகர் பிரயாணத்தை நிறுத்த மாட்டேன்.

காசி. வ-ம்:—அவ்விதமே சென்றுவா. பதிவாக்கைத் தடுத்துப் போகும் பலா பலனைச் சீக்கிரங் காண்பாய். ஆயினும் ஒன்று சொல்கிறேன்

## விருத்தம்

மங்கையேஎனதுசொல்லை மறுத்துநீமதுரைசென்றால்
இங்கிதபாலருக்கு இடர்வராவண்ணம்காப்பாய்
அங்குயேதேனும்துன்பம் அணுகினால்நீதிரும்பி
இங்குபின்வரவேவேண்டாம் இதுமொழிதவறிடாதே.

வ-ம்:—பெருமையிழந்து வறுமை நேர்ந்த காலத்தில் உன் தமையன் வீட்டுக்குப் போகவேண்டுமென்று என் வார்த்தையை மீறி செல்லத் துணிந்தாய். சென்ற விடத்தில் உனக்காவது அல்ல தென் பிள்ளைகளுக்காவது அவமானம் நேரிடுமாகில் மறுபடியும் இங்கு நீ திரும்பி வரக்கூடாது. இவ்வார்த்தை கவன மிருக்கட்டும். செல்வோம் வா. (சீன் முடிவு)

**சீன்-2. இடம்-முன்காடு.**

**நடிகர்:—குலசேகரி, காசிராஜன், 7-பிள்ளைகள், விறகு தலையன், வாணியன், பிராமணன்.**

[காசிராஜன் பிள்ளைகளுடன் வெளிவரும் சமயம் எதிரே விறகு தலையன் வருதல்]

காசி. வ-ம்:—குலசேகரி! உங்களை வழியனுப்ப வந்தவிடத்தில் இதோ நம்மெதிரில் தோணும் அவசகுனங்களைப் பார்த்தாயா?

## காசிராஜன் பாட்டு

**(பசியாலுடல் என்ற மெட்டு)**

சகுன மதுநோாய்—வந்து
தடைசெய்வது பாராய்—அடி
தையலே சென்றாலேதீது
பொய்யல்ல நேருமிப்போது (சகு)

[விறகு தலையன் வெளிவந்து]

விறகு தலையன். வ-ம்:—விறகு வாங்கலையோ விறகு! விறகு வாங்கலையோ விறகு! [உட்போதல்]

காசி. வ-ம்:—காதலி குலசேகரி! பார்த்தனையா? எதிரேவந்த விறகு தலையனை; கண்ணே! சகுனத்தடையில் போவது நல்லதல்ல.

(ஷை மெட்டு)

நல். சகுன மிதுதானோ—மனந்
தயங்கு வதுமேனோ—வீண்
சஞ்சலங் கொள்ளவேவேண்டாம்
வஞ்சிநான் சென்றுவருவேன் (சகு)

வ-ம்:—வழிப் பாட்டையில் அவரவர்கள் வேலையை நாடிப் போவதைப் பார்த்து அவசகுனமென்று நாம் பேசுவது கூடாது. வீதியில் விறகுவிற்றுச் செல்வது அவசகுனமா.

[வாணியன் எண்ணைக்குடத் துடன்வெளிவந்து]

வா. வ-ம்:—எண்ணை வாங்கலையோ எண்ணை. எண்ணை வாங்கலையோ எண்ணை.

[பிராமணன் வெளியேவந்து]

பிரா. வ-ம்:—தம்பிரான் வீட்டில் இன்று தலைதிவசமாம். ஒரு ஜோடி சோமன் கிடைக்கும். உம் புரோகிதன் பிழைப்பதும் கஷ்டமாயிருக்கு கலிகாலத்தில்.

காசி. வ-ம்:—நங்கா நல்லதங்கா! விறகு தலையனுடன் நில்லாது வாணியன் எண்ணைக்குடத்துடன் செல்வதும், புரோகிதன் எதிரானதும் நல்லதல்ல. ஆதலின்,

பாட்டு (ஷை மெட்டு)

காசி. இன்னும் பிடிவாதம்—செய்ய
ஏற்காது அந்நீதம்—அடி
இன்றனைத் தனித்தனுப்பக்
குன்றுதே எனதுமனம் (சகு)

நல். வேதன் விதிபோலே—எல்லாம்
விளையும் புவிமேலே—இந்த
வேளைஎந்த னுக்குவிடை
வேண்டும்சென்றிடவேமன்னா (சகு)

வ-ம்:—அன்றெழுதிய அயன் விதிப்படி எல்லாம் நடக்கும் இதற்காக தாங்கள் மனம் வருந்துவது தகாது; நேரமாகிறது விடை கொடுத்தனுப்புங்கள்.

காசி. வ-ம்:—மாதே! காலத்துக்கேற்றபடி உன் மதியும் மாறிவிட்டது. இந்த அலங்கோலத்துடன் போகவேண்டுமென்று புறப்பட்டாய் உன்னிஷ்டம் ஜாக்கிரதை. நான் கூறியது ஞாபகமிருக்கட்டும்; பிள்ளைகளைப் பத்திரமாகப் பார்த்துக் கொள் சென்று வா; (குழந்தைகளை அணைத்து முத்திட்டு) பாலர்காள்! தாய்மொழி தடுக்காது ஜாக்ரதையாகப் போய் வாருங்கள்.

[நல்லதங்கையும், பிள்ளைகளும் நமஸ்கரித்துப் போகின்றனர். காசிராஜன் அவர்களைப் பார்த்தவண்ணம் கீழ்விழுந் தழுதல்]

பாட்டு (ஐயையோ நானொரு என்ற மெட்டு)

இராகம்-நீலாம்புரி, தாளம்-ஆதி.

பாதிமதியணிந்த ஜோதிசுடரே எந்தன்
பாலரைக் காத்தருள்வாய் பரமேசனே
சொன்னசொல்லைத் தடுத்து தோகைபோகின்றாளதோ
துன்பம்வராமல் காப்பாய் பரமேசனே
தன்னந்தனியாய் நின்றேன் தனயர்களைப் பிரிந்தேன்
தற்காத்தருள் புரிவாய் பரமேசனே

[எழுந்து போகிறான்] (சீன் முடிவு)

## சீன்-3. இடம்-பின்காடு.

நடிகர்:—நல்லதங்கை, பிள்ளைகள் வேடன்.

[பிள்ளைகளுடன் நல்லதங்கை உள்ளிருந்தபடி பாடிவருதல்]

தர்க்கம் (காதலனும் வரக்காணாத என்ற மெட்டு)

நல். வேகமாய்நடந்து வாருங்கள் பாலர்காள்
வெய்யலதிகமாய்ப் போச்சே
நாகாபரணன் செயலோ இங்கிப்படி
நம்மையும்சோதிக்க லாச்சே

பிள். கானலெரிக்குதே களைவந்து மூடுதே
கால்கள்கடுக்குதே அம்மா
எனம்மாஅழைக்குறீர் எங்களை வாவென்று
இன்னுமெங்கேசெல்வ தம்மா

நல். இன்னும்கொஞ்சதூரம் என்னுடன்வாருங்கள்
ஏங்கிநிற்காமலே மக்களா
அண்ணன்வீடுசென்று உங்கள்பசியாறி
ஆடியிருக்கலாம் மக்களா

பிள். பச்சைமரக்கொடி படர்ந்துயிருக்குதே
பழங்கள்பறித்துத்தா அம்மா
அச்சமாகுதிந்த ஆரண்யத்தைக்காண
அம்மான்வீடுஎங்கே அம்மா

நல். சொந்தமாமன்வீடு அந்தவனஞ்சென்ருல்
தோணுமடா எந்தன் மக்களா
சிந்தைகலங்காமல் சீக்கிரம்வருவீர்
சென்றங்கிருக்கலாம் மக்களா

ஞான. வ-ம்:—அம்மா! இன்னும் மாமன் வீடு எவ்வளவு தூரம் இருக்கிறது. தாயே எங்களால் நடக்க முடியவில்லையே. கால்களிரண்டும் நோகிறதே. களையால் காதடைக்கிறதே. பசி பொறுக்க முடியவில்லையே. ஐயோ நாங்கள் என் செய்வோம்.

நல். வ-ம்:—கண்மணிகாள்! இதோ எதிர் தோன்றும் கானகம் கடந்ததும் உங்களம்மான் அரண்மனை தெரியும். அங்கு சென்ருல் உங்கள் இஷ்டப்படி தேவையான போஜனம் செய்து பசியாறலாம். இன்னும் சிறிது தூரம் நடந்து வாருங்கள்.

[பிள்ளைகள் யாவரும் உட்கார்ந்து கொண்டு]

வ-ம்:—அம்மா! எங்களால் ஓரடியும் எடுத்துவைத்து நடக்கயேலாது. எங்கள் பசியைத் தீர்த்து வைத்தால், நடந்து வருவோம்.

நல். வ-ம்:—ஐயோ தெய்வமே! இதுவுநின் சோதனையா. நானினி என்செய்வேன். பதியின் வார்த்தையைத் தடுத்துவந்த பலனு இது.

### தாக்கம் (ராமையா ரகு என்ற மெட்டு)

பிள். பசிக்குதே அம்மா பசிக்குதே
பசிக்குதே என்னம்மணி
பலகாரங்களு மில்லையா

நல். பசித்தமக்களா பொறுத்துக்கொள்ளுங்கள்
விருக்ஷத்தின்கனி பறித்துத்தருகிறேன்
மக்களா அருமை மக்களா

பிள். சோருதே கைகால் சோருதே
சோருதே என்னம்மணி
சோகமேலிட லானதே

நல். சோர்ந்தமக்களா வாய்ந்தவனக்கிளி
சேர்ந்துபேசிடும் பாங்குதெரிகுவீர்
மக்களா அருமை மக்களா

பிள். தவிக்குதே நெஞ்சந் தவிக்குதே
தவிக்குதே என்னம்மணி தாகமேலிடலானதே

நல். தாவியேவனந் தாண்டியங்குத
டாகமேகண்டு தாகந்தணியலாம்
மக்களா அருமை மக்களா

வ-ம்:—பாலர்காள்! அடுத்தவனத்தில் குளிர்ந்த சோலை படர்ந்த தடாகமிருக்கிறது. அங்கு சென்று தாகந் தணியலாம். இதோ எதிர்தோன்றும் கனிவகைகளைப் பறித்து வருகிறேன். சிறிது பொறுங்கள்.

[நல்ல தங்கை உட்போதல் வேடன் பிராப்தம்]

## வேடன் பாட்டு

(ஆ சகிகாள் என்ற மெட்டு)

பல்லவி

போகுதுபார் அதோ போகுதுபார்

அநுபல்லவி

போகுதுபார் ஒருமான திவேகமாய்ப்
புதையக்கால்பதிய அதோ (போ)

சரணங்கள்

எய்தனனேகணைகள் மான்மேல்
எய்தனனேகணைகள்
எங்கிப்பின் வாங்கிசாந்
தாங்கிவுயிர் நீங்கியதோ சாகுதுபார்

வ-ம்:—வெகு வேகமாக ஓடிவந்த அவ்விளமானானது என்னை யேய்த்துச் சென்றுவிட்டதே. (அங்குமிங்கும் சுற்றிப் பார்க்கின்றான்) நல்லதங்கை ஓர் பாம்பினால் துரத்தப்பட்டு ஓவென்றலறுகிறாள். வேடன் கண்டு (ஆஹா! ஓர் பெண்ணை பெரிய பாம்பொன்று கடிக்கப் பார்க்கிறது; அம்பெய்து அதனைக்கொன்றவளைக் காப்பாற்றலாம்.)

[அம்பைவிட்டு பாம்பைக் கொன்றபின்]

வ-ம்:—அடடா! இதென்ன ஆச்சர்ய அதிசயமாகத் தெரிகிறது அடர்ந்து படர்ந்த இவ் வாரண்யத்தில் என்றுமில்லாதவிதமாய் இன்றோர் பொற்கொடி உதயமாகி இருக்கின்றனள். சின்னஞ் சிறு பால்யர்கள் அம்மாதைச் சூழ்ந்து நிற்கின்றனர். அவளது புத்திரர்களோ; ஆஹா! ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, எழு பிள்ளைகள்; என்ன இது இச்சிறுவயதில் எழு பிள்ளைகளைப் பெற்றதும் ஆச்சர்யமே! (யோசனை) மனித

வினத்தைச் சேர்ந்தவள்தானு? அல்லது இம்மாவன தேவதை தான் இவ்விதந் தோன்றி என் மனதை மயக்குகின்றதோ? (உற்றுப் பார்த்து) இல்லை உண்மையி லிவள் மானிடவதார மங்கையர் திலதமே! ஐயமில்லை. வெகுதூரம் நடந்துவந்து களைத்திருக்கின்றனர்போல் காண்கின்றது. இச்சமயத்திலும் இவ்வனிதாமணி என்ன வசீகரத்துடன் விளங்குகின்ருள் பேஷ்.

## வேடன் விருத்தம்

வில்லதுபுருவமாகும் வேலதுவிழியுமாகும்
பல்லதுமுத்தேயாகும் பவழமேஇதழுமாகும்
சொல்லதுஅமுதமாகும் தோகையின்சுகமெப்போதும்
நல்லதுஎனக்கின்றந்த நான்முகன்படைத்திட்டானே.

(தர்மசம்வர்த்தனி என்ற மெட்டு)

பல்லவி

அழகில்மயிலிவள் குயிலின் மொழியுடையாள்
ஆமாம் நிஜந்தான் அதிகவிகசித மிலகுமனநடையாள்

அநுபல்லவி

பழகி இவளொரு கலவிசுகமதைப்
பார்க்கவே வெகு சிலாக்யமாகுமே (அழ)

சரணம்

சரஸவிரகசை யோகசுந்தரியே
ஜகன் மோகனங்கி
தழுவியணைய விநோத தந்திரியே
தகதகனவொளிவிடு மிவளின்மேனி
தரணிதனிலெனக் கினியமதனினி (அழ)

வ-ம்:—உலகத்திலுதித்த பெண்களின் அழகை எல்லாம் ஒருங்கேகொண் டெழுந்த இவ்வுத்தமியைக் கட்டாயம் கட்டியணைவதே ஆண்பிறப்பின் பலன். ஆம்; அருகில் சென்று எண்ணத்தைப் பூர்த்தி செய்வோம்.

[வேடன் வருவதைக் கண்டு குலசேகரி திடுக்கிட் டெதிர்வந்து]

வ-ம்:—அண்ணு! நமஸ்காரம்.

வேட. வ-ம்:—ஆசீர்வாதம்; பெண்ணே! அழகமைந்த உன் சரீரத்தை இந்த அறியாச் சிறுவர்களுடன் அவதிப்படும் நிலைமையில் வைத்து இவ்வாரண்யத்தில் நீ வந்த காரணம் யாது?

நல். வ-ம்:—அண்ணா! நானோ தௌர்ப்பாக்ய தசையால் பலவித சுகத்தை இழந்து பதியைப் பிரிந்து பரதேசிபோல் பந்துக்களை நாடிச் செல்கின்றேன். குழந்தைகள் நடக்கமுடியாமல் கஷ்டப் படுவதால் இங்கு தாமதிக்க நேர்ந்தது.

வேட வ-ம்:—நல்லது இப்போதுன் னுயிரைக் காத்ததுபோல் இனியும் உனது குழந்தைகளுக்கும் உனக்கும் வேண்டிய சகாயம் செய்கிறேன். நல்ல சுகத்துடன் உங்களுக்கு வேண்டிய ஆதர வளிக்கிறேன். என் வார்த்தைக் கிணங்கி அதன்படி நடப்பாயா?

நல். வ-ம்:—நான் இணங்கக்கூடிய வார்த்தையாகில் அதன்படி செய்கிறேன்.

வேட. வ-ம்:—பெண்ணமுதே. பெரும்பார் புகழப் பெண்ணுரு வெடுத்த கண்மணியே, இக்கானகத்திலின்றுன்னைக் கண்டது முதல்

### தர்க்கம் (ராஜவிசுவாஸ என்ற மெட்டு)

வே. மையல்கொண்டு வந்தேனென்னை
மருவிடவா கண்ணே
மருவிடவா என்னை
மருவிடவா

தையலுன்மேலே தாணிந்தநாளே
சரஸவிரகமானேன் தழுவிடவா

(ஷை மெட்டு)

நல். தையலென்மேல் மோகங்கொள்ளத்
தகாது போடா வேடா
தகாது போடா மூடா
தகாது போடா

ஐயையோ இந்தவாது அடுக்குமோ அடுக்காது
அநீத மாகுமிது அகன்றிடடா
வேடா அகன்றிடடா

வே. காமன்கணை களென்னைவாட்டுதடி
என்னை வாட்டுதடி
என்னை வாட்டுதடி

தாமதமேனடி சகிக்கவுமாகாதடி
சமயம் சமயமிது தயை செய்யடி
என்மேல் தயைசெய்யடி

வ-ம். பெண்ணே என்வார்த்தைக் கிணங்காவிடில் வெகு கஷ்டப்படு வாய். இக்காட்டில் என்னையன்றி யுனக்கு வேறு துணையில்லை. என் கையினின்றும் தப்பித்துச்செல்ல உன்னாலாகாது. உம். என்ன சொல்கிறாய்.

நல். வ-ம்:—அடே மூடா! உனக்கிது தகுமோடா வேடா உனது குலாசாரகுணத்தைக் காட்டாதே எத்துயர்வரினும் என் கற்பை இழக்கக் கனவிலுங் கருதேன். விநாசகாலா விலகி நில்லடா.

வேட. வ-ம்:—அடி என்கண்ணே கண்மணியே! இவ்வாது உனக்குத் தகாது. இனி தடுத்துப் பேசுவாயாகில் பலாத்கரிப்பேன். அவ் விதம் நிகழாமுன்னம் என் இஷ்டத்துக்கிணங்கிவிடு.

நல். வ-ம். ஐயோ தெய்வமே! இக் கொடும்பாவியின் கையிலிருந் தெப்படி தப்புவது. நாதன் வார்த்தையை மறுத்து வந்ததின் பலன் இன்றே கண்டேன். ஆபத்பாந்தவா! அனாத ரக்ஷகா! உன்னையன்றி யாதரிக்கவேறில்லைப் ப்ரபுவே.

## விருத்தம்

வேடமே மாறிவந்து விஜயனுக் கருள்கொடுத்த
வேடனே விமலநாதா வேளைஇவ் வனத்தில்வாழும்
வேடனே எனதுகற்பை விலக்கிடமனது வைத்தான்
வேடனை எரித்தவேதா வேளை எந்தனைக் காப்பாயே.

[வேடன் எரிந்து போதல். குலசேகரி பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு நடக் கின்றாள்.]

## தர்க்கம்

(பசிக்குதே என்ற மெட்டு)

பாலர். பாச்சிதா அம்மா சோச்சிதா
பாச்சிதந்தா லாச்சுதம்மா
பசியுமேலிட லானதே

நல். பாச்சியுமடா வாச்சபஞ்சத்தால்
பீச்சுவதும்பால் போச்சுதே அப்பா
மக்களா அருமை மக்களா

(சீன்முடிவு)

சீன்-4. இடம்-சயனக்ருகம்.

நடிகர்:—நல்லண்ணன், அலங்காரி.

[இருவரும் சயனித்திருக்க நல்லண் ணன் திடுக்கிட் டெழுந்து]

## நல்லண்ணன் பாட்டு

(இந்தவுடலைநம்பி என்ற மெட்டு)

கேளடியலங்காரி வோர் கினவுகண்டேன்
கண்டேன் கண்டேன் கண்டேன் கண்டேன்

வ-ம்:—கண்ணே அலங்காரி! ஆ ஆ இதென்ன ஆபத்துக்கிடமான சொர்ப்பனம். என்ன விபத்து நேருமோவென் றேங்குகிற தென்மனம்.

அல. வ-ம்:—நாதா! என்ன சமாச்சாரம் என்ன கனவு நினைவிருக்கிறதா.

நல்லண்ணன் பாட்டு (ஷை மெட்டு)

தங்கையாளந்தக்காட்டில் மைந்தர்கள் தன்னைக்கூட்டி
வந்தவினையைநீட்டி வரவேகண்டேன்
கண்டேன் கண்டேன் கண்டேன் (கேள)

பஞ்சத்தினாலேவாடி சஞ்சலத்தோடுதேடி
பாலர்களுடன்வோடி வரவேகண்டேன்
கண்டேன் கண்டேன் கண்டேன் (கேள)

நல்லண். வ-ம்:—காதலி! காசிமகாராஜனுக்குக் கல்யாணம் செய்துகொடுத்த என்னருமைக் குலசேகரி நல்லதங்கை தனது நாட்டில் 12-வருஷமாக மழையில்லாததினால், பஞ்சமேற்பட்டு சகல பொருளையும் தோற்றுத் தன் ஏழு பிள்ளைகளுடன் காட்டில் வரக் கனவுகண்டேன். இதுண்மையா யிருக்குமா? ஐயோ என்னருமைச் சகோதரிக்கு இவ்வித ஆபத்து நேரிடலாமா. மணம் செய்து கொடுத்தநாளாய் அவளது திருமுகத்தை மறுமுறை பார்க்காத பாவியாகிய நான் இன்றுக்கனவுகாண நேர்ந்ததே. பரமேஸ்வரா இதற்கென் செய்வேன்.

அல. வசனம்:—நாதா ஏனிப்படி துக்கப்படலானீர்கள். நினைவே கினவென்பது தெரியாதா.

## அலங்காரி பாட்டு

(பேச்சரிந்துபேசு என்ற மெட்டு)

கண்டகனவினாலே மனங் கலங்கியழுவதாலே
அண்டை வீடறிந்தாலே அவ மானமாகுமிதாலே

வ-ம்:—நாதா! தேகம் அலுப்பால் களைத்துப் படுத்தாலும் அல்லது சிரசில் பித்த மதிகரித்தாலும் அன்றி ஏதோ மனக்கலக்கத்தின் மாறுபட்டாலும் நித்திரையில் பலவித சம்பவம் நேரிடுவது சகஜந்தான். இதற்காகத்தாங்கள் இவ்வித சோகங்கொள்வது நன்றாமா மேலும்,

பாட்டு (ஷை மெட்டு)

கட்டிலுக்குமேலே நல்ல
கம்பசித்திரைவேலே அது
எட்டிப்பார்த்ததாலே இந்த
யேக்கமுமக்கிந்நாளே

வ-ம்:—நாம் சயனித்திருக்கும் சப்ரமஞ்சத்தின்மீது சித்தரித்திருக்கும் விசைப்பதுமைகள் தமது நித்திரையில் மனிதரூபம் போல் தோன்றியிருக்கலாம் ஆதலின்,

பாட்டு (ஷை மெட்டு)

விடுவிடுமிந்தவிசனம் இவ்
வேளைசரஸபஜனம்
தொடும்வருமிகமதனம் கண்ட
சொர்ப்பனமிதுபுதினம்

வ-ம்:—பிராணேசா எழுந்திருங்கள் விசனம் விடுங்கள் தங்கைக்கு ஒரு குறைவும் நேராது. மகா மகத்துவமுற்ற காசி நகரில் பஞ்சம் தோன்றுவதாவது அவர்கள் அவ்வூரைவிட்டு இங்குவருவதாவது இதென்னகனவு வீண் பிரேமைதான்.

## நல்லண்ணன் விருத்தம்

என்னமோவுரைக்கலானுய் என்மனம்துடிதுடித்து
என்னமோவிதமதாகி யேங்குவதாலேஅங்கு
என்னமோதங்கைக்குக்குற்ற இடரதைத்தெரியேன்நேர்வ
தென்னமோஎன்னையாளும் ஈசனின்கிருபைதானே.

வ-ம்:—அலங்காரி! என்னமோ பலவிதமாக தேறுதலுரைக்கின்ருய் எப்போதும் நான்கண்ட சொர்ப்பனம் தவறுவதில்லை. என்னவரினும் ஈசன் செயலன்றி வேறென்ன. காதலி நாளையத்தினம் காலையில் வேட்டைமார்க்கம்போய் வரவேண்டும். சர்வ ஜாக்ரதையுடனிருந்து தர்பார் காரியாதிகளையும் மந்திரிகள் மூலம் விசாரித்து மனமகிழ்ந்திரு நான் வருகிறேன்.

[நல்லண்ணன் போகிருன்]

(சீன் முடிவு)

**சீன்-5.** **இடம்-மூன்காடு.**

நடிகர்:—நல்லதங்கை, பிள்ளைகள்

### தர்க்கம்

(பாங்கியே என்ற மெட்டு)

நல். என்னருமைப்பாலர்களா இன்பமுள்ளசீலர்களா
இவ்வனத்தைக்கண்டுமனம் ஏங்கிடாமல்வாரீரப்பா

பிள். இன்னுமெங்கேஇருக்குதம்மா எங்களம்மான்வாழுமனே
என்னிருகால்நோகுதம்மா இனிநடக்கலாகாதம்மா

நல். காணுமிந்தவனங்கடந்தால் காணலாமெனண்ணன்வீடு
கண்மணிகாள் என்னுடனே கடுகநடந்துவாரீர்

பிள். வ-ம்:—அம்மா! எங்கள் மாமன் வீடு இன்னும் எத்தனைதூரம் இருக்கும். இதோ இதோ என்று கானகத்திலேயே நடந்து கொண்டிருக்கின்றீர்களே. தாயே உண்மையைச் சொல்லுங்களம்மா.

நல். வ-ம்:—பாலர்காள்! மாமன் வாழும் மதுரைமாநகர் எல்லைக் கடுத்த ஆரண்யம் இதுதான். இன்னும் ½-காததூரத்தில் ஊர் தோன்றும். அப்பா சிறிதுநேரம் சிரமம் கருதாது நடந்து வாருங்கள்.

(ஷை மெட்டு)

காணுமிந்தவனங்கடந்தால் காணலாமென்னண்ணன்வீடு
கண்மணிகாள் என்னுடனே கடுகநடந்துவாரீர்

(சீன் முடிவு)

**சீன்-6. இடம்-காடு.**

**நடிகர்:—நல்லதங்கை, நல்லண்ணன், 7-பிள்ளைகள், வேடுவர்கள்.**

[நல்லண்ணன் வேட்டையாடி வரும் சமயம் நல்லதங்கையைப் பார்த்து]

## நல்லண்ணன் பாட்டு

**(சென்றதோர் புறவைத்தேடி என்ற மெட்டு)**

நல்லண். ஆரம்மா இக்காட்டில் தனி
யாக மைந்தருடனே நீ
கோரமாய் வந்தது மேது
கூறுவாய் என்முன் னிப்போது

நல்லண். வ-ம்:—அம்மா! நீ யார்? இம் மைந்தர்கள் யார்? இக்கொடிய காட்டில் வரவேண்டிய காரணம் யாது?

நல்லதங்கை பாட்டு (ஷை மெட்டு)

காசிநகராதிபதி காதலியாகுமென்சதி
வாசியா லிவ்வனம் வந்தேன்
வந்தப்பஞ்சத்தாலே நொந்தேன்

வ-ம்:—காசிராஜன் மனைவி இவர்கள் என் மைந்தர்கள்; பனிரெண்டுவருஷமாக வந்த பஞ்சத்தா லிக்கெதிக் காளாகி வந்தேன். [நல்லண்ணன் ஆத்மகதம்]

வ-ம்:—என்ன யிது; காசிமகாராஜனென்ருல் நமது மைத்துனரல்லவா? அவர் நாட்டில் இப்பஞ்சம் வரக் காரணமில்லையே அங்ஙனமாயின் இம் மங்கை நமது தங்கைதானே; அம்மா!

பாட்டு (ஷை மெட்டு)

பெற்றதோர் பிதாவின் பேரு
பிறந்து வளர்ந்த ஊரு
உற்றதை சொல்வாய் நீ அம்மா
ஒன்றுக்கும் அஞ்சாமல் சும்மா

வ-ம்:—அம்மா உனது மாதாபிதாவின் பெயரென்ன பிறந்து வளர்ந்த நகரமெது. தடையின்றி சொல்ல வேண்டுகிறேன்.

நல்லதங்கை பாட்டு (ஷை மெட்டு)

நல்லண்ணன் தங்கை நானண்ணு
நல்லதங்கை என்பேர் மன்னு
சொல்லும்தந்தைபேர் பூபதி
சொந்தஊர்ப் மதுரைப்பதி

வ-ம்:—நான் பிறந்துவளர்ந்த நகரம் வடமதுரையாகும். முத்து ராமலிங்க பூபதியே என் தந்தை என் தமயன் நல்லண்ணன். என்பெயர் நல்ல தங்கை.

[நல்லண்ணன் கீழ்விழுந்து]

## நல்லண்ணன் பாட்டு

(கானகத்தில் நாமலைந்து என்ற மெட்டு)

ஐயையோ என்னருமைத்தங்கா ஆனதோ வுனக்கிவ்விதி
வையகத்தி லிதர்க்குத்தானே வந்துபிறந்தா யிப்பதி

நல்லதங்கை பாட்டு (ஷை மெட்டு)

காலவினை தானிதற்கே கலங்கலாகுமோ எனண்ணு
பாலர்தன்னை பார்த்துவந்த பஞ்சத்தைதீர்ப்பா எனண்ணு

நல்லண்ணன் பாட்டு (ஷை மெட்டு)

என்னுடன்பிறந் துனக்கு இந்தவிதி நேரலாமோ
மன்னவராம் காசிபதி மனதுநொந்து வாடலாமோ

வ-ம்:—அண்ணு! வருத்தப்படவேண்டாம்; ஈசனருளால் நேர்ந்த வினைக்கு நாம் என்ன செய்யலாம். பிள்ளைகளே! இவர்தான் உங்கள் மாமனுர்.

## நல்லண்ணன் விருத்தம்

கலங்காதே நல்லதங்கா கற்பழியாத மங்கா
அலங்காரி உன்னைக்கண்டாள் அன்புடன் உபசரிப்பாள்

தலங்காக்கும் நமதுவீடு சந்தோஷமாகச் செல்வாய்
பலம்போற்றும் வேட்டையாடி பரிவுடன் வருவேனம்மா.

வ-ம்:—அம்மா! எதர்க்கும் அஞ்சவேண்டாம். நான் வேட்டையாடி வீடுவந்து சேருகிறேன். குழந்தைகளுடன் ஊர்போய் சேர். உன் அண்ணி அலங்காரி அன்போ டுன்னை உபசரிப்பாள்.

நல். வ-ம்:—அப்படியே செல்கிறேன். தாங்கள் சீக்கிரம் வந்து சேருங்கள்.

(சீன் முடிவு)

## சீன் 7.

**அரண்மனை.**

**நடிகர்:—அலங்காரி, காவலன், நல்லதங்கை, பிள்ளைகள்.**

அல. வ-ம்:—காவலா பிராணபதி வேட்டைக்குச்சென்று இன்றுடன் ஓர் பக்ஷமாகிறது வீட்டின் ஞாபகம் இல்லாமல் காட்டில் வாசம்செய்து கொண்டிருக்கிறார்போலும். தூதர்கள் மூலம் ஏதாவது சேதிவந்ததுண்டா.

காவ. வ-ம்:—அம்மா நாளை மறுநாள் பட்டணத்திற்கு வருவதாக மந்திரி பிரதானிகள் தெரிவித்ததைக்கேட்ட குடிமகாஜனங்கள் நகரலங்காரம் செய்கின்றனர்.

அல .வ-ம்:—காவலா வேட்டையைமுடித்து மகாஜனங்களின் மனத்துயரகற்றி ஆனைமீதா ரோகணித்து பிராணேசர்பவனி வருவதைப்பார்ப்பதே விசேஷமல்லவா.

காவ. வ-ம்:—வெகுவாய் அரசர்களின் பவனித்திருவிழாவைத் தெரிசிப்பது உத்தமமென்று பெரியோர்கள் சொல்வது வழக்கந்தான்.

அல. வ-ம்:—நல்லது நீ சென்று அந்தப்புறத்தில் நமது குழந்தையுடன் விளையாடிக்கொண்டிரு.

காவ. வ-ம்:—அப்படியே அம்மணி

[காவலன் உட்சென்று ஓடோடி வந்து]

காவ. வ-ம்:—அம்மா! அம்மா! அம்மா! அம்மா!

அல. வ-ம்:—என்னடா அது என்ன சமாச்சாரம் ஏனிப்படி வோடி வந்தாய்.

காவ. வ-ம்:—நான் என்ன சொல்வேனம்மா.

அல. வ-ம்:—என்ன என்ன.

காவ. வ-ம்:—அம்மா! வந்துட்டுதம்மா.

அல. வ-ம்:—என்னடா வந்தது! யாருக்கு வந்தது.

காவ. வ-ம்:—யாருக்கும் வரவில்லை. தங்களுக்குத்தான் வந்தது.

அல. வ-ம்:—எனக்கு வர்ரதாவது விஷயத்தை விவரமாகச் சொல்.

காவ. வ-ம்:—அம்மா! என்மீது கோபிக்கவேண்டாம். தயவு செய்து இப்படி வந்து அப்படிப் பாருங்கம்மா பாருங்கோ.

[அலங்காரி வெளிப்பக்கம் உற்றுப் பார்த்து வயிற்றி லடித்துக் கொண்டு]

அல. வ-ம்:—அடே காவலா! வந்ததடா என் குடிக்குத்தீம்பு. ஐயோ இந்த சக்களத்தி இங்கு ஏன் வருகிறாள்.

## பாட்டு

* அவள் தான் அவள் தானவள்
அதோவருகின்றாளே என்
அடிவய றெரிகிறதே (அவ)
காசிநகரைப் பாழ்படுத்திக்
கன தனங்கள் யாவும் போக்கி
நாசகால சக்காளத்தி
நாணமின்றி இங்கு வாராள் (அவ)

இவளுமிந்த வீட்டைத்தேடி
ஏதுக்கோவரா ளிப்போது
கவலைமெத்த வாகுதடா
கதவைச்சாற்றி விடடா (அவ)

வ-ம்:—அடே காவலா! பிராணபதி அன்றிரவு கனவு கண்டு கூறியது பொய்யென்றிருந்தது மெய்யானதே. ஐயை யோ! என் குடிக்கு யேமனுயுதித்த குலசேகரி ஏழுபிள்ளைக ளுட னல்லவோ வருகிறாள்.

காவலன். வ-ம்:—ஏனம்மா. அந்தம்மாள் வந்தாலென்ன இரண்டு நாளைக்கிருந்து விருந்து சாப்பிட்டுப் போவார்கள். அதற்கா கத் தாங்களேன் இவ்வித வயிற்றெரிச்சல் கொள்ளவேண்டும்.

அலங்காரி. வ-ம்:—அட பாவி. அவள் கலியாண சமயம் அரண் மனையில் உள்ளதையெல்லாம் வாரி வண்டி வண்டியாக சீதன வரிசை என்று என் பிராணேசர் கொடுத்தனுப்பினர். இப் போதவள் பஞ்சத்தால் வாடி பாலருடன் வந்ததைப் பார்ப்பா ராகில் இம்மதுரைமா நகரையே அவளுக்கு இனமாகக் கொடுத் தாலும் கொடுப்பார். பின் என்னுட்டந் திண்டாட்டந்தான்.

---

* இப்பாடல் ஆலந்தூர்க் கம்பெனியில் பாடிவருவது.

காவலன். வ-ம்:—அம்மா தங்களைப்போன்ற மகாவுத்தமி இவ்வுலகத்தில் கிடைப்பது கஷ்டம். அதிருக்கட்டும் அந்தம்மா அப்படி இப்படி வீட்டை நெருங்கிவந்து விட்டார்களே இதற்கெப்படி யோசனை.

அலங்காரி. வ-ம்:—யோசனையா. பிராணேர் இது சமயம் இங்கில்லாததும் ஓர் நன்மைதான். நான் இப்போது தலைக்குப் பத்து போட்டுக்கொண்டு சுரமடித்தவள்போல் பாசாங்குசெய்து படுத்துக்கொள்ளுகிறேன். அரண்மனைக் கதவுகளையும் அந்தப் புறவாசல்களையும் அடைத்துத் தாப்பாளிட்டுவிட்டுத் தாதிகளையும், மற்ற வேலையாட்களையும் பின்புறத்தி லிருக்கும்படி கட்டளையிட்டு, நீயும் இருக்குமிடந் தெரியாமல் ஓர் மூலையில் படுத்துக்கொள். அவள் வந்து பார்த்துவிட்டு வந்தவழியே போகட்டும்.

காவ. வ-ம்:—இதெல்லா மெதற்கு? வருகின்றவர்களை வரவேற்று இரண்டுவேளை போஜனம் செய்வித்து அனுப்பிவைத்தாலென்ன. இதில் யேதேனும் தங்களுக்குக் குறைவுண்டா.

அல. வ-ம்:—அடே! அவளுக்கும் அவள் பிள்ளைகளுக்கும் வடித்துப்போட யாராலாகும். ஒருவேளை சாதமிட்டால் அதே சாக்கில் ஒருவருஷமானாலும் வீட்டைவிட்டு வெளியேறமாட்டாள். ஆகவே வரும்போதே விரட்டிவிட்டால் சிரமமில்லை.

காவ. வ-ம்:—பேஷ்! நல்லயோசனை. அம்மா முதலாவது தாங்கள் முக்காடிட்டுப் படுத்துக்கொள்ளுங்கள். இரண்டாவது என் வேலையைச் செய்கிறேன்.

அல. வ-ம்:—போடா சீக்கிரம் கதவைத் தாளிடு.

[காவலன் கதவுகளைத் தாளிட்டு விடுகிறான். நல்லதங்கை பிள்ளைகளுடன் வெளிவந்து]

நல். வ-ம்:—அப்பா குழந்தைகளே! நாம் தேடிவந்த மாமன் வீடு இதுதான். பார்த்தீர்களா இந்த அரண்மனை எவ்வளவு அழகா இருக்கிறது.

பிள். வ-ம்:—அம்மா கதவுகளெல்லாம் பூட்டியிருக்கிறதே. அதென்ன காரணம்.

நல். வ-ம்:—அகாலமானதால் அரண்மனை பூட்டப்பட்டிருக்கிறது. கதவைத்தட்டி மாமா மாமி என்று அழையுங்கள்.

[பிள்ளைகள் மாமா மாமி என்றழைத்தல்]

பிள். வ-ம்:—அம்மா மாமாவுமில்லே. மாமியுமில்லே. தாங்கள்தான் கூப்பிட்டுப் பார்க்கவேண்டும்.

நல். வ-ம்:—பாலர்காள் சற்றுநேரம் இவ்விடத்தில் அமருங்கள். இதோ உங்கள் மாமியை அழைத்துக் கதவைத் திறக்கும்படிச் செய்கிறேன்.

[பிள்ளேகள் யாவரும் ஒரு பக்கம் அமர்கின்றனர். நல்லதங்கை தனியாக]

வ-ம்:—காரணமில்லாமல் கதவடைத்திருக்கிற விஷயம் இன்ன தெனத் தெரியவில்லே. என் தமையனர் வீட்டிவில்லேயே? அதனுல் கதவைச் சாற்றிவைத்திருக்கின்ருர்களோ? வேறெக் காரணமோ? இன்னதெனத் தெரியவில்லே. எதற்கும் அண் ணியை அழைத்துப் பார்க்கலாம்.

## நல்லதங்கை பாட்டு

### (காட்சிகண்ணி மெட்டு)

அண்ணியரே அண்ணி
அண்ணனிட தேவி
அன்பாய்க் கதவைத் திறப்பாய்
அண்ணி அண்ணி அண்ணி
அன்பாய்க் கதவைத் திறப்பாய்

குடியிற்பிறந்த பெண்ணுள்
கூவி யழைக்கின்றேனே
கொஞ்சங் கதவைத் திறப்பாய்
அண்ணி அண்ணி அண்ணி
கொஞ்சங் கதவைத் திறப்பாய்

வ-ம்:—அண்ணி! அண்ணி! உனது அன்பான நாத்தி நல்லதங்கை வந்திருக்கிறேன். ஐயோ! நான் கூப்பிடுங் குரல் கேட்கவில் லேயா? அல்லது உங்கள் தேக சுகமில்லாமல் படுக்கையி லிருக் கின்றீர்களோ? இருந்தாலும் வேலேக்காரர்களே விட்டுக் கதவைத் திறக்கும்படி சொல்லலாகாதா? மதனி!

## நல்லதங்கை பாட்டு

### (ஷடி மெட்டு)

பாலர்பசியால்வாடிப் பரதவிக்கின்ருர்களே
பாங்காய்க் கதவைத் திறப்பாய்
அண்ணி அண்ணி அண்ணி
பாங்காய்க் கதவைத் திறப்பாய்

வ-ம்:—மதனி; பனிரெண்டு வருஷமாக மழையில்லாததினால் பஞ்ச மதிகரித்து பரதேசிகோலத்துக் காளாகி பாலர்களுடன் நான் பிறந்த வீட்டைத்தேடி வந்தேன். பசிப்பிணியால் பிள்ளைகள் பரிதவிக்கின்றனர். சிறிது கதவைத திறந்து செல்வக் குழந்தைகளின் திருமுகத்தைக்கண்டு பெருமகிழ் வெய்திகளை தீர்க்க வேண்டும். மதனி! மதனி!

## நல்லதங்கை பாட்டு

(காட்டிலிருக்கவந்து என்ற மெட்டு)

காசிநகரம் விட்டுன்
வாசல்வழியே வந்தேன்
அண்ணியே வீட்டுக்
கதவை யடைத்திருக்குங் காரணமென்ன
சொல்வாய் அண்ணியே

வ-ம்:—அண்ணி காசிமாநகரிலிருந்து கால்நடையாக காடு மலை வனம் வனாந்திரங்களைக் கடந்துவந்த நான் கால்கடுக்க நிற்கிறது உனக்குத் தகுமா? மதனி! ஒன்றிரண்டல்ல; மூன்று நான்கல்ல; ஐந்து ஆறல்ல;

பாட்டு (ஷை மெட்டு)

ஏழுபிள்ளைகளுடன் கால்கடுக்க நிற்கிறேன்
அண்ணியே உமக்
கேனோ இக்கோபம்வந்து தானாய்க் கதவைத்திற
அண்ணியே

வ-ம்:—இதேதோ கபடமாகத் தெரிகிறது. இவ்வளவு நேரம் குரல் வருந்தக் கூவியழைத்தும் ஏனென்று கேட்பாரில்லை. அண்ணன் அரண்மனையி வில்லாததினால் அண்ணன் மனைவி அலங்காரி ஏதோ நயவஞ்சகம்செய்வதற்காகவே எனது வரவைத் தெரிந்து இவ்வித சூழ்ச்சி செய்திருக்கிறாள். நல்லது மேல் நடப்பதைக் கண்டறிந்து போவதே நலம். (யோசனை)

## விருத்தம்

நதிமதியணிந்தஈசா நான்கற்புவதியேயாகில்
பதிபுகழ்காசிதேசப் பதியுமென்பர்த்தாவாகில்
ததியிதுஎனதுதாயார் தன்வீட்டுவாசல்காக்குங்
கதவிதுதிறக்கவேண்டிக் கர்த்தனே துணைசெய்வாயே.

[கதவுகள் திறக்கிறது அலங்காரி நோய்கொண்டவள் போல் படுத்திருக்கிறாள். பிள்ளைகள் உள்ளே சென்று அங்கிருக்கும் பண்டங்களை எடுத்துத்

தின்கின்றனர். நல்லதங்கை அலங்காரியிடம் சென்று]

### தர்க்கம்

நல்ல. அண்ணியரே எந்தன் அண்ணியரே
அண்ணனையே மணர்ந்தவளே
ஆதிவந்தவளே சுகந்
தந்தவளே

அலங். தலைவலியாலே தவித்திருக்கும்போது
தட்டிஎழுப்பவந்த மட்டிநீயாரு

நல்ல. நல்லதங்கை என்பேரு

அலங். அவளிங்கிலை பாரு

நல்ல. சற்றெழுந்து வுட்காரு

அலங். ஈதென்ன பெரும்வாது

நல்ல. வாதில்லை மாது

அலங். வந்ததென்வகை கூறு

நல்ல. கூறுவேன் பசிதீரு

அலங். சாதமாக வில்லையே

நல்ல. சமைத்திடவும் தொல்லையேன்

அலங். கேழ்வரகரைக்கிறுர்

நல்ல. ஏழ்மக்களுந் துடிக்கிறுர்

அலங். மக்களுக்குஇங்கே வடித்துவைத்திருக்குதா
யேதே தவசரமா

நல்ல. அண்ணியரே அண்ணியரே

அல. வ-ம்:—ஏண்டி! வந்தவள் நான் இருக்கும் நிலமையைக் கவனியாமல் சோறு சோறு மக்கள் பசியைத் தீரு தீரு என்று பேயைப்போல அலைகின்றுயே? என்னடி சமாச்சாரம். ஏண்டியம்மா இந்த ஏழு குட்டிகளையுங் கூட்டிக்கொண்டுவோடி வந்தாய். என்னடி வேலை இங்குனக்கு.

நல். வ-ம்:—அண்ணி! தங்கள் தேகத்துக்கென்ன. தங்களை எழுப்பி தேக சுகத்தை விசாரிப்பதற்குள் தாங்கள் கோபித்துக் கொள்வது நல்லதல்ல.

## அலங்காரி பாட்டு

ஐந்துநாளாய் அடிக்குங்காச்சல்
கொஞ்சமல்லவே எனக்கு

நல். வ-ம்:—ஏன் அரண்மனை வைத்தியரிடம் அவிழ்தம் சாப்பிடப் படாதா.

காவ. வ-ம்:—மருந்துமேலே மருந்து. மாத்திரைமேலே மாத்திரை. ஒரு லேகியமா. ஒரு மாத்திரையா. ஒரு கஷாயமா. அடாடாடா. அதென்ன காச்சலோ தெரியலம்மா.

அலங்காரி பாட்டு (ஷை மெட்டு)

வைத்தியரைக் கேட்டதற்கு
வாதமென்கிருர் எனக்கு

நல். வ-ம்:—என்னவாதம்! பித்த வாதமா. கபவாதமா. எதுவாயிருந்தாலும் அதற்கேற்ற மருந்து சாப்பிடாமல் சும்மா யிருக்கலாமா.

காவ. வ-ம்:—என்னவாதம்! பிடிவாதந்தான். எவ்வளவு மருந்து கொடுத்தாலும், வியாதி தீர்ந்தபாடில்லே. அது என்னமோ கிரக பலன் போதாதுபோல் தெரிகிறது.

நல். வ-ம்:—அப்படியானுல் ஜோசியரைக் கேட்டால், அவர் எல்லா விஷயத்தையும் விவரமாகச் சொல்லுவாரே.

அலங்காரி பாட்டு (ஷை மெட்டு)

ஜோசியரைக் கேட்டதற்கு
தோஷமென்கின்ரு றெனக்கு

காவ. வ-ம்:—ஜோசியரைக் கேட்டோம். அவர் பாலகிரக தோஷமென்று சொன்னுர். நவக்ரகசாந்தி, ஓமசாந்தி, சனிபகவான் சாந்தி எல்லாம் செய்து பார்த்தோம் தோஷம் போகவுமில்லே. சந்தோஷமாகவுமில்லே.

நல். வ-ம்:—அப்படியானுல், குலதேவதைகளின் குற்றமா யிருந்தாலு மிருக்கலாம். கோடாங்கி வைத்துப் பார்க்கிறதுதானே.

அலங்காரி பாட்டு (ஷை மெட்டு)

சாமியாடிக் கேட்டதற்குத்
தயக்கமென்கின்ரு றெனக்கு

காவ. வ-ம்:—ஒரு கோடாங்கியா. ஒரு குறிமேடையா. எல்லாம் பார்த்தானது. வியாதி இன்னதென யாரும் சொல்லவில்லே.

கண்ட காச்சல் கட்டையோடப் போகுமோ என்னமோ தெரியாது.

[அலங்காரி பிள்ளைகள் தின்பண்டங்களை எடுத்துத் தின்பதைப் பார்த்துக் கையில் பிரம்பை எடுத்துக் கொண்டு]

## அலங்காரி பாட்டு

(நிச்சயமாய்த் தீர்க்ககடனுக்கு என்ற மெட்டு)

பல்லவி

* எப்படித்தான் தாய்வயிற்றில் இருந்தீரோபத்துமாதம்
இத்தனைப் பதஷ்டமாமா

அநுபல்லவி

இப்படிக்கெல்லாம்செய்தால் இடிப்பேனுதைப்பேன் துஷ்டா
எதற்கோநீங்கள்வந்தது ஈனமானமற்றபிரஷ்டா

சரணம்

மாங்கா எடுக்கலாமா உங்கள் வயிற்றில்
மண்ணை யடைக்கலாமா

தேங்காயைத் தொடலாமா உங்கள் கரத்தை
தீயாலெரிக்கலாமா

ஆங்காரமோ அடா அடக்கமில்லாத பேயே
போங்காலமோ யிங்கு பொறுக்கவந்தாய் நாயே

[பிள்ளைகளை அடித்து உதைக்கின்ருள். பிள்ளைகள் அழுதுகொண்டே நல்லதங்கையிடம் முறையிடல்]

## தர்க்கம்

(என்னையே ஈன்றெடுத்த என்ற மெட்டு)

பிள்ளை. மாங்கா எடுத்தோமென்று அம்மாவே அம்மா
மாமியடித்தனளே அம்மாவே

நல்ல. மாமன்வீட்டிற்குவந்து மக்களா
மாங்கனி தின்ருல் பாவம் மக்களா

பிள்ளை. தேங்காய் எடுத்தோமென்று அம்மாவே
மாமி திட்டியடித்தனளே அம்மாவே

நல்ல. செல்வமிழந்தவர்கள் மக்களா
இந்தத் தேங்காயைத்தின்ருல் பாவம் மக்களா

---

* இப்பாடல் ஆலந்தூர் கம்பெனியார் பாடிவருவது

நல். வ-ம்:—பாலர்காள்! நீங்கள் பிறந்து இதுநாள்வரை மாமன் வீட்டுக்கு வந்தவர்களல்ல. ஆகவே முதலாவது மாமன் வீட்டுக்கு வந்தவர்கள் மாங்கனியைத் தின்பது தோஷமென்றும், செல்வத்தை யிழந்து வந்தவர்கள் தேங்காயைத் தின்னப்படாதென்றும் உங்கள் நன்மையைக் கருதியே மாமி அடித்தாள். வருந்தவேண்டாம். எல்லோரும் ஒருபுறமாக உட்காருங்கள்.

அல. வ-ம்:—ஆமாமடி ஒரு வீட்டில் வாழ்க்கைப்பட்டால் அவரவரதிஷ்டப்படி சுகமும் துக்கமும் இருக்கும். எதுவோ தொடைகாலியாகிய நீ காசிராஜன்வீட்டில் கால்வைத்ததும் அவ்வூரைப் பாழ்படுத்தி அவரையும் பரதேசி யாக்கிவிட்டாய் உன் தரித்திரம் அவரையும் பிடித்துக்கொண்டது என்ன கஷ்டம் வந்தாலும் புருஷனைப்பிரிந்து தனியாய் வரலாமா. அவருக்கில்லாத கஷ்டம் உனக்கென்னடி.

நல். வ-ம்:—எத்தனைநாளுக்கு பட்டினிகிடப்பது பிள்ளைகள் துன்பம் சகிக்க முடியாமல் வந்தேன்.

அல. வ-ம்:—பிள்ளைகளைக் காப்பாற்றவேண்டி புருஷனைத் தனியாய் விடுத்துப் பூதம்போல் ஓடிவந்தாயோ. என்ன தைர்யமடி உனக்கு. ஏழு பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு கால்நடையாகவே வந்துவிட்டாயே. புருஷனைவிட வா உன் பிள்ளைகளும் நீயும் உயர்ந்துவிட்டீர்கள்.

நல். வ-ம்:—மதனி தாங்கள் சொல்வதும் நியாயந்தான் எதுவோ எனது காலவிதிப்பயன் இவ்வித துற்புத்திக்கிடங்கொடுத்தது நான் பதியைப்பிரிந்துவந்தது தவறுதான். குற்றத்தை மன்னிக்கவேண்டும்.

அல. வ-ம்:—அதிருக்கட்டும். தாரை நீர்வார்த்துத் தத்தம்செய்து அவரே உனக்குக் கதியென்று புருஷன் பின்னால் அனுப்பி வைத்த பிறகு இங்குவரவேண்டிய சொந்தம் உனக்கேதடி.

## நல்லதங்கை பாட்டு

(தில்லாம்திரி என்ற மெட்டு)

*சொந்தமென்று வந்தேனண்ணி
சோர்ந்தார்மக்கள் பசியால்
சந்தோஷமாய் மைந்தருக்குச்
சாதம்தர வேண்டும்

## அலங்காரி பாட்டு

(அதிவீரமதுடனே என்ற மெட்டு)

என்னுசொந்தம்போடி வுனக் கன்னங்கிடையாது
இந்நாட்டிலும்பஞ்சமுண்டு இங்கேதுக்குவந்தாய்

---

* இப்பாடல் ஆலந்தூர் கம்பெனியார் பாடிவருவது.

(நல்லதங்கை ஷை மெட்டு)

வந்தாலென்ன அண்ணியரே
வறுமைப் பிணியாலே
இந்தயிடம் வரலாமோ
இரங்கேதநாங்கள் பிழைக்க

அலங்காரி (ஷை மெட்டு)

கலியாணத்தில்சீதனங்கள் கனமாய்க்கொடுத்தோமே
அலியேஅதைவிற்றுண்ணுமல் அஞ்சாமலேவந்தாய்

அல. வ-ம்:—ஏண்டி! உனக்குக் கலியாணம் செய்த காலத்தில் கொடுத்த சீதன வரிசைகள் கொஞ்சமா? வண்டி வண்டியாக யேற்றிவிட்டோமடி.

## அலங்காரி பாட்டு

(மாலையிலே என்றமெட்டு)

அண்டாவிலேபத்து குண்டாவிலோர்செட்டு
நன்ருய்க்கொடுத்தோமடி அதுஎங்கடி
இன்றேபுகல்வாயடி
காப்புகொலுசு கடயம்வங்கிமுத்துக்
கோத்துக்கொடித்தோமடி அதுஎங்கடி
இன்றே புகல்வாயடி
நத்துபுலாக்கு மூக்குத்தி கம்மல்ஜோடி
பத்துகொடுத்தோமடி அதுஎங்கடி
இன்றே புகல்வாயடி

அலங்காரி. வ-ம்:—சீதனமான சீதனமா. ஐயோ பாவம் நமது புருஷனுடன் பிறந்தவள் ஒருத்திதானே என்று வெள்ளிப் பாத்திரங்களென்ன வண்டி வாகன மென்ன செப்புப் பாத்திரங்களென்ன சேலைகளென்ன காதோலைகளென்ன முத்து மாலை மோகனமாலை காசுமாலை முதலிய மாலைகளென்ன எவ்வளவு நகை எவ்வளவு சாமான் எத்தனை தாதிகள் இது மட்டுமா நஞ்சைநிலம் புஞ்சைநிலம் தோப்புத்துறவு ஆடுமாடு ஐயையோ அதை நினைக்கவும் என் வயிறு பகீர்பகீரென்று எரியுதடி. அவ்வளவு சாமானையும் என்னடி செய்தாய்.

## நல்லதங்கை பாட்டு

(தில்லாம்திரி என்ற மெட்டு)

எல்லாம்விற்று உஜ்ஜீவித்தோம்
இனிவொன்று மேயில்லை

பொல்லாப்பஞ்சம் வந்துற்றதால்
பொருளனைத்து மிழந்தோம்

அலங்காரி. வ-ம்:—அடி தொடைகாலி எல்லா சாமானையும் விற்றுத் தின்று விட்டாளாமே. இவளுக்கு இன்னும் என்னதான் கொடுக்கிறது. காசிநகரத்தையே பாழாக்கிவிட்டு தரித்திரத்தை ஆபரணமாகப் பூண்டுவந்த உனக்கு இங்கிருக்க இடங் கொடுக்கக் கூடாது.

## அலங்காரி பாட்டு

### (அதிவீரம என்ற மெட்டு)

போனதெல்லாம் போச்சிஇங்கு
பொழுது போகாமுன்னம்
நானளிக்குங் கூழையுண்டு
நடப்பா யிதைவிட்டு

அல. வ-ம்:—சரி போனது போகட்டும். உன் தரித்திரத்தை இங்கு இறக்கி வைக்காதே. சற்றுநேரம் அப்படி உட்கார் (சற்று யோசித்து) நான் இங்கு இவளைத் தங்கவிட்டால் பிராண பதி வந்து பார்த்து இவளுக்குத் தேவையான சகாயம் செய்வார்; இவளுக் கடங்கி நடக்கச் சொல்லுவார். ஆகவே மறுபடியு மிவளிங்கு வராமலிருக்கும்படி தக்க அவமானம் செய்தனுப்ப வேண்டும். அடே காவலா! இங்கு வா;

காவ. வ-ம்:—என்ன சமாச்சாரம்; என்னம்மா?

அல. வ-ம்:—நமது அரண்மனைத் தோட்டத்தில் பொத்தல்பானை ஒன்றிருக்கிறது அதை எடுத்துக் கொண்டு இரண்டு வாழை மட்டை பச்சையாகவெட்டி எடுத்துக்கொண்டு அந்தப்புறத்தில் கேழ்வரகுமா வரைத்து வைத்திருக்கிறது அதையும் கொண்டு வா.

காவ. வ-ம்:—இதெல்லாம் எதற்கம்மணி.

அல. வ-ம்:—எனது நாத்திக்கு விருந்துசெய்து அனுப்புவதற்கு.

காவ. வ-ம்:—தேவலாம் நல்ல விருந்து இந்த விருந்தெதற்கு. வந்தவர்களை வந்தவழியே போகச் சொன்னால் போகிறார்கள்.

அல. வ-ம்:—எதுவோ நம்மாலான மரியாதை செய்தனுப்பினால்தான் நல்லது.

காவ. வ-ம்:—மெத்த சந்தோஷம். தங்களைப்போல் உத்தமிகள் எத்தனைபே ரிருக்கிறார்களோ தெரியாது. இதனால்தான் காலமழை சரியாய்ப் பேய்கிறதம்மா.

[காவலன் உள்ளேசென்று பானை வாழைமடல் முதலியவற்றைக் கொண்டு வருகிறான்]

அல. வ-ம்:—மூன்று கல்லெடுத்துக்கொண்டுவா

காவ. வ-ம்:—ஏனம்மா கல்லெடுப்புவைக்கவா.

[காவலன் உட்புகுந்து கற்கள் கொண்டு வர அலங்காரி அடுப்புகூட்டி சூழ் பானேவைத்து வாழைமடலை எரிய வைத்து அடுத்தடுத்து ஊதுகிருள்.

காவ. வ-ம்:—அம்மா சாதாரண அடுப்பாயிருந்தால் சட்டென்று தீப்பிடிக்கும் இது கல்லடுப்புதானே.

## அலங்காரி பாட்டு

* காடாத்தி கல்லடுப்பு கருமாதிஅடுப்பு
கனியகனிய ஊதிஊதி
கடுக்குதே என்னிடுப்பு (கா)
நாடாத கல்லடுப்பு
நாத்திக் கேற்றஅடுப்பு
நானும்நீயும் ஊதிஊதி
நடுங்குதே என்இடுப்பு (கா)

[பூ. பூ. என்று ஊதுகிருள். காவலனும் ஊதுகிருன்]

காவ. வ-ம்:—அம்மா இந்தக் கல்லெடுப்பு எரிவது தங்களால்தான் இருக்கிறது.

அல. வ-ம்:—எனக்கென்று வந்தாளே எமனைப்போல் படுபாவி. என் இடுப்பெல்லாம் கடுக்கிறதே உஸ் அப்பா இந்தப்பேய்களுக்கு வடித்துக்கொட்ட யாராலாகும்.

நல். வ-ம்:—ஹே. ஜெகத்ரக்ஷகா சர்வலோக சரண்யா பிறந்து வளர்ந்த வீட்டுக்குவந்த பலனு இது. தெய்வமே எல்லாம் நினது திருவிளையாடலன்றி வேறில்லை.

## நல்லதங்கை விருத்தம்

பத்தினிநானேயாகில் பர்த்தாவுமவரேயாகில்
உத்தமிநானேயாகில் ஒருநூல்கழுத்தியாகில்
சத்தியமாகயெந்தன் தனையர்கள்பசிதணிக்க
பத்திசூழ்பானைபொங்கப் பரமனே அருள்செய்வாயே.

[விருத்தம் பாடி முடியும் சமயம் காவலன் அடுப்பில் தீ மூட்டி விட்டு]

காவ. வ-ம்:—அம்மா அம்மா அம்மா அம்மா பத்திகிச்சம்மா பத்திகிச்சி. பச்சை மட்டை பத்திகிச்சி. பத்தினியம்மா பத்தினி. எங்கம்மா நீயே பத்தினி.

* சகல நடிகர்களும் பாடிவருவது.

அல. வ-ம்:—காவலா! பார்த்தாயா என் பதிவிரதா மகத்துவத்தை பச்சை வாழை மட்டையை எரியவைத்தேன்.

காவ. வ-ம்:—உங்கள் பதிவிரதா மகத்துவத்தை நானு பார்க்கவேண்டும். என்னை தாங்கள்தான் பார்க்கவேண்டும்.

நல். வ-ம்:—அண்ணி! பிள்ளைகள் பசியாலலைகின்றனர். தயவுசெய்து கூழை இறக்கிப் பாலர்களுக்குக் கொடுக்கவேண்டும்.

அல. வ-ம்:—என்னடியம்மா அவசாம் ஆக்கப் பொறுத்தது ஆறப் பொறுக்க வேண்டாமா.

## அலங்காரி பாட்டு

(ஐயையோ நாங்களும் என்ற மெட்டு)

தைப்பிறையுங்கண்டேனானல் தரையிலிறக்குவண்டி
மாசிபிறைகண்டேனானல் மனையிலிறக்குவண்டி (தைப்)
முப்பிறையுங்கண்டேனானல் மூர்ப்பேனடி கூழுனக்கு
நாற்பிறையுங்கண்டேனானல் வார்ப்பேனடிகூழுனக்கு (தைப்)

அல. வ-ம்:—என்ன அவசரமடி! பிள்ளையைச் சாக்கிட்டுப் பூதம் விழுங்குகிற கதையா. லஜ்ஜையில்லாமல் எண்டி இத்தனை குட்டிப் போட்டனை. பண்ணி பல குட்டிப் போட்டுப் பிரயோசனமென்ன. காயுங் கூழைப் பதம்பார்த்து இறக்குமுன் ஆவென்று அலைகின்றாயே.

[நல்லதங்கை வருந்தி நிற்கின்றாள்]

## பிள்ளைகள் பாட்டு

(நடக்கக் கால்கள் என்ற மெட்டு)

கொடுமையான கோபம்வேண்டாம் கூழிடுமாமி
அடிமையான எங்களைநீ அடிப்பதாகுமோ (கொ)
பசியினாலே எங்கள்தேகம் பதருதேமாமி
பிசகில்லாமல் அன்னமிட்டுப் பேணுவாய்மாமி (கொ)

பிள். வ-ம்:—மாமி! பசி எடுக்கிறதே. வயிறு கடுக்கிறதே. கொஞ்சங் கூழ் கொடுக்கக்கூடாதா. மாமி சீக்கிரம் எங்கள் பசியைத் தணிக்கவேண்டு மாமி.

நல். வ-ம்:—மதனி! குழந்தைகள் முகத்தையாவது கவனித்து அவர்கள் பசியை அகற்றவேண்டுகிறேன். கோபம் வேண்டாம். ஏதோ எங்கள் விதியின் மகத்துவம் இப்படி நேர்ந்தது. வந்தவரை பெற்ற பலன்போதும் இனிஇங்கு வரவுமாட்டேன் தயவு செய்ய வேண்டும்.

அல. வ-ம்:—ஆ! அப்படியா? சமாச்சாரம். இனிமேலிங்கு வரவு மாட்டாயா. வாராதவளுக்கு இந்தக் கூழேனடி.

## அலங்காரி பாட்டு

இராகம்-அடாணு, தாளம்-ரூபகம்.

பல்லவி

* தூக்கி வுடைப்பே னுன்
தலைமீதிற் கூழைத்
தூறுசெய்யவோ நீவந்தாய்

அநுபல்லவி

ஆக்கப் பொறுத்தவ
ளாரப் பொறுக்காமல்
அலைகிறு யென்னடி
அறிவுகெட்ட நாயே சீசீ (தூக்)

சரணம்.

கள்ளி வுனக் கென்ன பதட்டம் நீ
கத்தினு லாருக்கு நஷ்டம் என்
னுள்ளத்தின் சாக்ஷியா யிஷ்டம் உனக்
கிடுவதே பெருங் கஷ்டம்
பிள்ளையைச் சாக்கிட்டுப்
பூதம் விழுங்கின
பேச்செல்லா மறிவே நான்
பேயேசீ நாயேசெல் (தூக்)

[கூழ்பானையைத் தூக்கி குலசேகரி தலையில் போட்டுடைத்து அடித்துத் துரத்துகிறுள் நல்லதங்கையும் பிள்ளைகளும் அழுதுகொண்டே போகின்றனர்.]

(சீன்முடிவு.)

### சீன்—8. இடம்-மதுரையிலோர் வீதி.

நடிகர்:—பார்வதி, நாராயணி, அயல்வீட்டுப் பெண்கள், நல்லதங்கை, பிள்ளைகள்.

பார்வதி. வ-ம்:—அம்மா! நாராயணியம்மா நல்லண்ண ராஜர் அரண்மனையில் அலங்காரி நடத்திய அக்ரமத்தைக் கவனித்தாயா?

நாராயணி. வ-ம்:—என்னடி யம்மா கொடுமையிலும் இது மகா கொடுமையா யிருக்கிறது. உலகத்தில் இப்படியும் ஒரு நாத்தி இருப்பாளா.

---

* இப்பாடல் ஆலந்தூர் கம்பெனியார் பாடிவருவது.

பார். வ-ம்:—பாவம் விவாகம்செய்து போனதுமுதல் வீட்டுவாசலை எட்டிப்பாராதவள். ஏழுபிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு பஞ்சம் தீருமட்டும் வயிறு பிழைக்கலாமென்று பிறந்த இடத்துக்கு வந்தால் தன்னுலியன்ற வுதவிசெய்வதைவிட்டு உதை கொடுத்துத் தள்ளிவிட்டாளே பாவி. பிள்ளைகள் முகத்தை யாவது பார்த்தாளா.

நாரா. வ-ம்:—நல்லண்ணர் இந்த சமயம் அரண்மனையிலிருந்திருந்தால் அல்லது வேட்டைக்குப்போனவர் இதுசமயம் வந்துவிட்டால் அப்போது தெரியும் அலங்காரிபாடு.

பார். வ-ம்:—தாய்வீட்டுக்குப் போனாலும் தன்னைப்பேணி போ என்பது இவள் விஷயத்தில் சரியாய்விட்டது. வரும்வரும் இவளுக்கும் இந்த கெதி வரும்.

நாரா. வ-ம்:—பார்வதி நல்லண்ணன்வருகிறவரையில் குலசேகரியை நமது வீட்டில் வைத்துபசரிப்போம்.

பார். வ-ம்:—அதோ வருகிருள் வரட்டும்.

## நல்லதங்கை பாட்டு

* வருவீர் அப்பா மக்களா மக்களா மக்களா
வரிசையாகவே என்பின்னே (வரு)

வருவீர் வருவீர்மனம் வாட்ட மடையாமலே
அருமையாகவே என்பின் ஆடிவிளையாடியே (வரு)

நடக்கும் வழியினுங்கள் நல்லமாமன் வீடுண்டு
நலமாயங்கனம் சென்று நமது பசிதணிப்போம் (வரு)

[அயல்வீட்டுப் பெண்கள் நல்லதங்கை முன்வந்து]

பார். வ-ம்:—அம்மா குலசேகரி! யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம். என்னசெய்யலாம். "ஊழிற் பெருவலியாவுள மற்றொன்று சூழினுந் தாமுந்துறும்" என்றபடி இதுவெல்லாம் ஊழ்வினைப் பயனே யாகும்.

நாரா. வ-ம்:—விதி யாரைவிடும். எப்பேர்ப்பட்டவர்க்கும் இப்படியொரு காலம் வரும். "குடைநிழலிருந்து குஞ்சரமூர்ந்தோர் நடைமெலிந்தோரூர் நண்ணினுநண்ணுவர்" என்பது நாம் வாசித்ததுதானே. ஆதலால்,

## பாட்டு

### (பாளைவாய்க் கமுகில் என்ற மெட்டு)

இந்தவிதமாகவேநீ சிந்தைநொந்து செல்வதேனு
அந்தமல்ல உந்தனுக்குப் பாரம்மா இங்கு
மைந்தருடன் தங்கி யிருப்பா யம்மா (இந்)

* இப்பாடல் ஆலந்தூர் கம்பெனியார் பாடிவருவது.

பால்பழம் தயிருடனே பாலமுது செய்துதாரோம்
பாலருடன் தங்கி யிருப்பா யம்மா வரும்
காலவினை யாரைவிடும் பாரம்மா (இங்)

சங்கையொன்றுங் கொள்ளவேண்டாம்
சஞ்சலம் மனதில்வேண்டாம்
தங்கிஎங்கள் வீட்டிவிருப்பா யம்மா-நல்ல
தங்கையே மனதுமகிழ்வா யம்மா (இங்)

பார். வ-ம்:—அம்மா நல்லதங்கா நாம் சிறுவயதிலிருந்த விசுவாசத்தைக் கருதி எங்களை உந்தன் சகோதரிஎன நினைத்து எங்கள் வீட்டில் தங்கியிருந்து களைப்பாறிச் செல்லம்மா!

நாரா. வ-ம்:—அம்மா குலசேகரி பால் பழம் தயிர் மோர் தருகிறோம். பிள்ளைகளுக்கும் கொடுத்து நீயும் பசியாறுவாய். சிறிதுநேரத்தில் சமையல்செய்து விடுகிறோம்.

பார். வ-ம்:—அம்மா எங்கள் வீட்டில் புசிப்பதற்கு லஜ்ஜையாயிருந்தால் சகல பதார்த்தமும் பாத்திரங்களும் தருகிறோம். நீயாகவே சமைத்து சாதம் புசித்துப் பசியாறி உங்கள் தமையன் வந்ததும் உன் வீட்டுக்குப் போவாயம்மா.

## நல்லதங்காள் பாட்டு

### (தனிவிடவும் தகுமோ என்ற மெட்டு)

எனக்காகவருந்தப்போமோ அம்மா
வினைப்பயன் விலகிடுமோ

தனக்கிணையான் அண்ணன் தான்வரும்வேளைகண்டு
தங்கை என்சங்கதியைச்சொல்வீரே மனக்கலக்கம்விடுவீர்
மாதெனையேமறப்பீர் வருகிறேன்விடை யளிப்பீர் (எ)

நல்ல. வ-ம்:—அம்மா உங்கள் அன்பிற்கு நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். உங்களகங்குளிர்ந்து முகமலர்ந்துரைத்த வார்த்தையால்எங்கள்பசியாறியது. அண்ணியிடத்தில் அவமானமடைந்து உங்கள் வீட்டில் அன்னம் புசிப்பேனாகில் நான் எனது அண்ணியை அவமானப்படுத்தியவளாவேன். தயவுசெய்து விடைகொடுத்தனுப்புங்கள். என்னை தமையன் என்னைத்தேடி இங்கு வருவாராகில் நடந்த விஷயத்தை நவிலுங்கள். நான் என் பிராணபதியிடம் போகிறேன்.

பார். வ-ம்:—உன்னிஷ்டப்படியே போய்வருவாயம்மா.

(சீன்முடிவு)

சீன்-9. இடம்-கானகம்.

நடிகர்:—ராமக்கோனுன், வளந்தக்கோனுன், கருப்பக் கோனுன், நல்லதங்கை, பிள்ளைகள்.

## இடையர்கள் பாட்டு

பல்லவி

கொண்டலாரோடேயோ
கோடலாரோ டேயோடேயோ

அநுபல்லவி

ஐந்துகன்றுடனே வந்தபசுவினை
ஆங்காரவேங்கை மிரட்டுது பார் பார் (கொ)

சரணம்

காட்டுக்குள்ளேபோடா கயிஞ்சிகொண்டுவாடா
வாட்டமில்லாமல்மாட்டை ஓட்டிப்போடாபோடா(கொ)

ராமக்கோனுன் வ-ம்:—ஏய் வளந்தக்கோனுரே! எதிராலே பாரை மேலே நிக்கிற பசுங் கண்ணுங்களே மடக்குங்காணும்.

கருப்பக்கோனுன் வ-ம்:—ஓய் ராமக்கோனுரே! அந்தக் சலயத்தை எடுத்துவாரும். ரெண்டு பருக்கையை வாயிலே போடுவோம்.

வளந்தக்கோனுன் வ-ம்:—ஏலே கருப்பக்கோனுன்! கடாட்டங்குட்டி கெடையிலே இருக்கா பாத்துவாங்காணும்.

[நல்லதங்கை எதிரில் வந்து வணங்கி]

நல். வ-ம்:—அண்ணமாரே! நமஸ்காரம்.

ராம. வ-ம்:—அம்மா! யார் பெத்த கொயந்தையோ. ரெம்ப கசிட்டம் போலத் தெரியுது. இந்தக் கொயந்தைங்கெல்லாம் யாரம்மா எங்கிருந்து வருதுங்கோ.

நல். வ-ம்:—நாங்கள் வழிபோக்காள் காசிமாநகரம் போகிறேம்.

கருப். வ-ம்:—ஐயோ பாவம் பரதேசிங்கபோலத் தெரியுதடா.

வளந். வ-ம்:—இருக்கட்டும். அம்மா இங்கே எங்களைத் தேடிவர வேண்டிய காரணமென்ன.

## நல்லதங்காள் பாட்டு

(யாங்கரோயி என்ற மெட்டு)

ஆரண்யத்தி லாடுமேய்க்கும்
ஆட்டிடையர்காள்
அன்பாகவோர் பாழுங்கிணறு
காட்டுவீரையா (ஆர)

ராமக்கோனுன். வ-ம்:—அம்மா ஏம்மா பாழ்கெணறு தேடுரீங்கோ என்ன சமாச்சாரம்.

(நல்லதங்கை பாட்டு ஷ மெட்டு)

பாலரெல்லாம் தாகத்தாலே
பரிதவிக்கின்ருர்
சீலரேவோர் கிணறுகாட்டி
தீர்ப்பீர் தாகத்தை (ஆர)

நல். வ-ம்:—அண்ணமாரே இந்தக் குழந்தைகளுக்கும் எனக்கும் அதிக தாகமாயிருக்கிறது. தாகசாந்தி செய்வதற்காகவே கிணறிருக்குமிடம் கேட்கலானேன்.

கருப். வ-ம்:—ஏனம்மா ஆட்டுப்பால் கறந்து தருகிரேம் குடிக்கிறதுதானே. கொயிந்தைங்களே கிணத்திலே இறக்கி எப்படியம்மா ஜலமெடுத்து கொடுப்பிங்கோ.

வ-ம்:—பால் பருகினுலும் தாகந்தணியாது. ஜலமேகுடிக்கவேண்டும். தயவுசெய்து கிணறிருக்குமிடங் காட்டுங்கள்.

வள. வ-ம்:—அம்மா! இப்படியே கெயக்காலே போயி மேக்காலே திரும்பி வடக்காலே வந்தா தெக்காலே ஒரு பெரிய ஆலமரங் கெணறு இக்குது படி பாசி பிடித்திருக்கும் ஜாக்ரதையாயிறங்கி ஜலங் குடிக்கணும் தெரியுதா போய்வாங்க.

கோனுரே வாங்காணும் கெடக்கி போவோம். (சீன் முடிவு)

**சீன்—10. இடம்-கானகம், கிணறு.**

**நடிகர்:—நல்லதங்கை, பிள்ளைகள், ஞானசேகரன்.**

**நல்லதங்கை பாட்டு**

**(காக்ஷிக்கண்ணி மெட்டு)**

இன்னொரு மாமன்வீடு இருக்குது மக்களா
என்பின் நடந்துவருவீர் மக்களா மக்களா மக்களா
என்பின் நடந்துவருவீர்
சின்னமாமன் வீடேகித் தீர்ப்போம் வந்தபசியைத்
தீவிரமாக வருவீர் மக்களா மக்களா மக்களா
தீவிரமாக வருவீர்

நல். வ-ம்:—பாலர்காள்! இன்னொரு சின்னமாமன் வீடிருக்கிறது. அங்கு போவோமாகில் நமது பஞ்சம் விலகும்; பசியாறலாம். இவ்வனங் கடந்ததும் அவ்வீடு தெரியும். ஓடி வாருங்கள் சீக்கிரம் போகலாம்.

ஞான. வ-ம்:—அம்மா! பெரிய மாமன் வீட்டில் நடந்த மரியாதை காணுதா. சின்னமாமன் வீட்டுக்கும் போகவேண்டுமோ. எந்த மாமன் வீட்டுக்கும் போகவேண்டாம். வந்த வழிபார்த்து ஊர் போய்ச் சேரலாம் வாருங்கள்.

நல். வ-ம்:—அப்படியாவது போவது நன்மைதான். கண்மணிகாள்! இவ்விடம் சற்றமர்ந்திருந்து சிறிதுநேரம் பொறுத்துப் போகலாம் அமருங்கள்.

[குழந்தைக ளிருபக்கமும் நல்லதங்கை மத்தியிலும் அமர்கின்றனர்]

நல். வ-ம்:—அப்பா பாலர்களே உங்கள் தந்தையின் வார்த்தையைத் தடுத்து வந்ததால் நமக்கிவ்வித துன்பம் ஏற்பட்டது. இந்த அவமானத்துடன் நாம் ஊர்போவது நல்லதல்ல. ஆகவே நான் சொல்வதைச் சிறிது கவனியுங்கள்.

## அகவல்

என்னருந்தவத்தில் இன்பமாயுதித்த
நன்னயப்பாலரே நவிலுவேன்கேளீர்
பன்னவருரைத்த வார்த்தையைத்தடுத்து
என்னருந்தமையன்வீ டேகினபலனுல்
அலங்காரிசெய்த அவமானத்தாலே
கலங்கியேநெஞ்சம் கானகம்வந்தோம்
நகர்க்கினி திரும்பி நாம்செல்வோமாகில்
நகைப்புக்கிடமாம் நாதன்கோபிப்பார்
வந்ததோர்பஞ்சம் வாட்டுதேநம்மை
இந்ததோர்தேகம் இனிமேலிருந்தென்
ஆதலினுலே அருந்தவக்கிளிகாள்
சாதலேநன்மை தானெனவறிவீர்.

[பிள்ளைகள் ஐயோ அம்மா என்று எழுந்துவோடுகின்றனர். நல்லதங்கை எழுந்துவோடி ஒரு பிள்ளையைப் பிடித்துக் கொண்டு]

## நல்லதங்கை பாட்டு

(ஐயோநானென்னசெய்வேன் என்ற மெட்டு)

ஒருரோமம்போனுலுங் கவரிமான்வாழாது
உயிர்போயிவுடலேது மக்களா ம ம ம

அவமானமடைந்துநாம் ஆருயிர்வாழ்வது
ஆகாது ஆகாதடா மக்களா ம ம ம

[முதல்பிள்ளையைக் கிணற்றில் தள்ளிவிட்டுக் கீழ் விழுந்தெழுந்து இன்னொரு குழந்தையை பிடித்துக்கொண்டு]

பாட்டு

(மரவுரி இதேன்னகோலம் என்றமெட்டு)

ஓடிவருவீரடா மக்களா அந்த
உம்பர்பதிசேரலாம் மக்களா
மானம்பெரிதல்லவோ மக்களா இங்கு
மாண்டுமடிவோமடா மக்களா

[இரண்டாவது குழந்தையை கிணற்றில் தள்ளிக்கீழ் விழுந்தெழுந்து மற்றொருவனைப் பிடித்துக்கொண்டு]

பாட்டு

(ஏதேசமுனுண்டேவாரு என்ற மெட்டு)

ஐயோமக்களாமடிந் தீரோ இந்த
அவனியாசையைமறந் தீரோ
வாடா என தருமைப் பாலா உயிர்
வாழ்ந்ததுபோதுமடா சீலா

[மூன்றுவதுபிள்ளையைக் கிணற்றில் தள்ளிவிட்டு வேறொரு குழந்தையைப் பிடித்து]

பாட்டு

(தஞ்சமுன்பாதம் என்ற மெட்டு)

பஞ்சம்வரவுமாச்சே பாலராசையும்போச்சே
பாரினில்பாவியானேனே மக்களா
இந்தகிணற்றில் தள்ளவோ

[நான்காவது குழந்தையைத் தள்ளிவிட்டு வேறொருவனைப் பிடித்து]

பாட்டு (ஷை மெட்டு)

எத்தனையோ தவம் இருந்துபெற்றேண்டாவும்மை
இந்தக்கிணற்றில் தள்ளவோ மக்களா
பாரினில் பாவியானேனே

[ஐந்தாவது குழந்தையை தள்ளிவிட்டு மற்றொருவனை பிடித்து]

பாட்டு (ஷை மெட்டு)

கார்த்திகைவிரதங்கள் காலம்தவராமல்செய்து
கருதிவளர்த்தபாலனே மக்களா
கருதிவளர்ந்த பாலரே

[ஆருவது குழந்தையைத் தள்ளி விட்டு ஏழாவது பெரிய பிள்ளை ஞானசேகரனைப் பிடிக்க அவன் ஓடுகிறான்.]

தர்க்கம்

(ஆயின்மேசீனிபகார் என்ற மெட்டு)

நல். ஓடாதேநீயும்வாடா என்மகனே
ஓடாதேநீயும்வாடா
ஒளியாதே வாடாசும்மா
காட்டினிலோடினால் தேடமுடியாதே

(ஷை மெட்டு)

ஞான. ஓடிப்பிழைத்திடுவேன் என்னம்மணி
ஓடிப் பிழைத்திடுவேன்
உன்பேரைப் போற்றிடுவேன்
நாடிஎன் தந்தைக்கே நான்சேதிசொல்லிடுவேன்

நல். ஆறுபேரிறந்து நாம் இருவருமிருந்தாலே
யாருங்கேலிசெய்வா ராதலாலே இப்போது

ஞான. வருஷத்திற் கொருமுறை உந்தன்கருமத்தை
வழுவாமலேசெய்வேன் மாதாஎனைவிடுவாய்

நல். வ-ம்:—கண்மணி ஞானசேகரா! என் வார்த்தையை தடுக்காதே. அடா கண்மணீ! வீண்வாது செய்யாமல் வந்துவிடு. இனிமேல் நாமிப்புவியி லிருப்பது கூடாது. நமது விஷயமறிந்து உன் தந்தையும் உயிர் விடுவார். எல்லோரும் சொர்க்கம் புகுவோம்.

ஞானசேகரன் பாட்டு

(யார்போய்சொல்லுவார் என்ற மெட்டு)

என்தாயே கேளம்மா
எனைவேண்டி இப்போது (என்)

நன்மையுடனேபல நாளும்தவம்புரிந்து
செம்மையுடன்பெற்றெடுத்தாயே வளர்த்தாயே (என்)

ஞான. வ-ம்:—அம்மா! ஐயிரண்டு திங்களாக அங்கமெல்லாம் நொந்து பெற்று, ஈ எறும்பு அணுகவிடாமல் காத்து ரக்ஷித்

துப் பாலூட்டி, சீராட்டி வளர்த்த என்னருமைத்தாயே! சிறியேனிரண்டொரு வார்த்தை சொல்வதைக் கவனமாகக் கேழ்க்க வேண்டும்.

தரித்திர திசையினால் தந்தைதனைப்பிரிந்து
தமையன்வீடணுகியே வந்தாய் மதியிழந்தாய் (என்)

ஞான. வ-ம்:—அம்மா! ஆதியில் என் தந்தை காசிபதி. காசிபதி என்றால் காசினி எங்கும் வணங்கும் அதிகாரம் பெற்றக் காருண்யப் பிரபுடீகன். வாழ்வாவது மாயம் மண்ணாவது திண்ணம் என்னு முது மொழிக் கிணங்க; ஏதோ சிறிது காலபலத்தால் தரித்திர திசை யடையப்பெற்றார். அதனால், தங்களுக்கு மனம் சலித்து அண்ணன் வீடு வந்தீர்கள். கற்புடைய பெண்டீர்க்குக் கணவனே மிக்க தெய்வம் என்பதை மறந்து, பெண்புத்தி பின்புத்தி என்னும் வாக்கி லீடுபட்டு; அண்ணன் வீடு வந்து, அண்ணியால் அவமானமடைந்து ஆற்றொணா துன்பத்திற்காளாகி இந்த ஆரண்யமணுகி என் சகோதரர்கள் ஆறுபேர்களையுங் கிணற்றில் தள்ளிவிட்டீர்கள். போதாக்குறைக்கு என்னையும் தள்ளிவிட எண்ணுகிறீர்கள். அம்மா இது வுமக்கு ஞாயமாகுமா?

பாட்டு (ஷை மெட்டு)

தற்கொலைபுரிவது தருமமாகாது
தந்தையின்வார்த்தை வீணாகாது

வ-ம்:—அம்மா எலும்புசதை இரத்தம் நிறைந்த இவ்வுடல் என்றைக்கிருந்தாலும் ஓர்நாளைக்கு இறக்கவேண்டியது நிச்சயமே பிறந்த அன்றைக்கே இறந்து போயிருந்தால் இப்போது இவ்வித துன்பத்துக்கெல்லாம் ஆளாகி யிருக்கமாட்டேன். ஆயினுமென்ன இப்போது நான் இறப்பதற்கும் பயப்படவில்லை பின்னெதற்குத்தான் பயப்படுகிறேனென்றால் பிள்ளைகளால் பெற்றோர்க்குமோக்ஷமென்று ஒரு பழமொழி யிருப்பதால் இப்போது என் சகோதரர்கள் ஆறுபேரு மிறந்தனர். முடிவில் நீயும் இறப்பது நிச்சயம். இதைக் கேட்ட என் பிதாவும் வுயிர் விடுவார். ஆகமசாஸ்திரவிதிப்படி ஆக உங்களனைவருக்கும் நான் ஒருவனாகிலுமிருந்து மோக்ஷதீபங் கொடுக்கவேண்டுமே என்று இப்போது தங்களுடன் இறக்கப் பயப்படுகிறேன்.

(பாட்டு ஷை மெட்டு)

சந்தச்சரபமுத்து சாமிதனக்கடிமை
சங்கரலிங்கந் தமிழ் கேளாய்
உயிர்மீளாய் (என்)

வ-ம்:—அம்மா இதைவிட இன்னும் நானுனக்குச் சொல்லவேண்டிய தில்லை. பின்னுமதிஷ்டம் என்னைக்கொன்றாலும் சரி கொல்லா மல் விட்டாலும் சரி எல்லாம் ஈசனருள்போ லாகட்டும்.

நல். வ-ம்:—அப்பா நீ சொல்வதும் சரியே. ஆயினும், மானுபிமான மென்பதில்லையா? யாராயிருக்கினும் மானம் பெரிதல்லவா? அவமானமடைந்தபின் உயிர் வாழ்வதா அடா என் கண்மணி!

பாட்டு

(ஒருரோமம்போனாலும் என்ற மெட்டு)

மானமிழந்தே யிந்த மானிலம் வாழ்வதிலும்
மாண்டு மடிவோமடா மகனே ம ம
ஆனவினை யிதற்கே நானென்ன செய்குவேன்
அப்பாயிங் கோடிவாடா மகனே ம ம

[ஞானசேகரனைக் கிணற்றில் தள்ளிவிட்டுக் கீழ்விழுந் தெழுந்து]

நல். வ-ம்:—ஆ ஜெகதீசா! என்னைப்போன்ற பெண் ஜென்மமும் இவ் வுலகத்தி லுண்டா? ஐயோ! நான் பிறந்த பெருமை என்ன; வளர்ந்த அருமையென்ன; வாழ்ந்த வாழ்வென்ன; இப்போ திக் காட்டில் ஏழு பிள்ளைகளையுங் கிணற்றில் தள்ளிவிட்டு, ஏகாங்கி யாய் நிற்கும் நிலைமை என்ன! தெய்வமே! இதுவும் உன் சோத னையா! எந்தக் குடும்பத்தைக் கலைத்தேன்? என் குடும்பம் இப்படிக் கலைந்தது. யாருக்கு என்ன தீங்கு செய்தேன்? எனக் கித்தீங்கு நேரிட்டது. எந்த பிள்ளையைத் தாயைவிட்டுப் பிரித் தேன்? என் பிள்ளைகளைப் பிரிந்து நிற்கலானேன். எந்த உயிருக்கு அன்னமிடாமல் பட்டினிப் போட்டேன்? என் வயிறு பட்டினி கிடக்க நேர்ந்தது. பரமேஸ்வரா! ஜெகத்ரக்ஷகா! ஈசனே! பதி வார்த்தையைத் தடுத்துவந்த பலனிதுவோ.

'உடன்பிறந்தார் சுற்றத்தார்' என்றிருக்க வேண்டாம். என்ற வார்த்தை நிறைவேறிவிட்டதே; ஐயோ! எனது அண்ணிக்கு நான் செய்த கொடுமையென்ன? எதற்காக என்னை இப்படி அடித்துத் துரத்தினாள். அன்னதானமே மேலானதென்று பெரியோர்கள் சொல்லி யிருக்கின்றார்களே. கேவலம் பந்துக்க ளாயினும், பரதேசியாயினும் பசி என்று வருவோர்க் கன்ன மிடுவது அதிக சிலாக்ய மல்லவா? இதை யெண்ணியாவது உப் பில்லாக் கூழையேனும் உண்ணென்று சொல்லிக்கொடாது அடித்துத் துரத்திவிட்டாளே அலங்காரி. ஆஹா! அண்டை வீட்டுப் பெண்டுகளிடமிருந்த பச்சாத்தாபமும் சொந்த அண் ணன் மனைவியிடம் இல்லாமல் போய்விட்டதல்லவா. சீ பேதை

மனமே வீணுக அவளை நிந்தித்துப் பலனென்ன? தாந் தாந் முன்செய்த வினை தாமே யனுபவிப்பார் என்றபடி நமது நல் வினை தீவினையை நாமனுபவிக்க வேண்டுமல்லவா? பரஞ்சோதியே! பார்வதீஸ்வர பசுபதியே! இப்படியும் ஓர் பெண் ஜென்மத்தைப் பிறப்பிக்கலாமா? தெய்வமே எத்தகைய ஜீவஜந்துவும் புத்திரர்மீது மெத்தவும் சித்தமுற்றிருக்கிறதே. அன்றியும் ஒருண் குழந்தையை வேண்டி கற்பகோடி காலமும் தவமியற்றும் மானிடர்களைக் கண்ணாரக் கண்டும் காசினி எங்கும் போற்ற சகலதானமும் சரிவரச்செய்து அருமையாகப் பெற்று வளர்த்த பிள்ளைக ளெழுவரையும் துடிக்கத் துடிக்க இப்பாழுங் கிணற்றில் தூக்கிப்போட்டுக் கொன்றுவிட்டேனே. நானு எழு பிள்ளைகளைப் பெற்றவள். இல்லை மலடி என்றல்லவோ சொல்ல வேண்டும். இவ்வித காலாகோலத்துக் காளாகியும் இன்னமும் உயிருடன் நிற்கின்றேனே. என் ஜென்மமும் ஒரு ஜென்மமா. இனி ஜென்மத்தை நொந்துதான் பலனென்ன? காலதாமதமாகிறது யாருவது தேடிவருமுன்னே கிணற்றில் வீழ்ந்திறத்தலே நலம். (யோசித்து)

ஆம்; அவசியம் நமது தமையனுவது பிராணேசனுவது நம்மைத் தேடி வருவார்கள். ஆதலின் அடையாளமாகத் தெரிந்துக் கொள்ளவும் பிறர் பார்த்தால் தெரியாதிருக்கவும் நமது மாங்கல்யத்தை கழட்டிவைத்து இங்கு மாள்வதே நலம்.

## விருத்தம்

கற்புளமாதேயாகில் கணவருமவரேயாகில்
பொற்புறமெனதுதாலி புவிதனில்வேற்ருர்கண்டால்
சொற்பெறுங்கல்லதாகத் தோன்றவேவேண்டுமெந்தன்
நற்குணத்தமையன்பார்த்தால் நலமுடன்தோற்றவேண்டும்.

நல். வ-ம்:—பரமேசா! இக்கல்லில் எனது அடையாளமாகக் கழட்டி வைக்கும் எனது மாங்கல்யமானது பிறர் கண்ணுக்குத் தென்பட்டால் கல்லைப்போலும் எனதுதமையன் அல்லது பிராணபதி இவர்கள் கண்ணுக்கு மாங்கல்யமாகவே தோற்றும்படி கிருபை பாலிக்கவேண்டும்; இனி தாமதம் செய்தல்கூடாது யாராவது தேடிவருமுன் கிணற்றில் விழுந்துவிடுவோம்.

## நல்லதங்காள் பாட்டு

(சோமசேகரனருளும் என்ற மெட்டு)

போதும் பெண்ணுய்ப்பிறந்த — ஜென்மம் ஜென்மம்
ஏழு—புத்திரரைப்பெற்றெடுத்த — கன்மம் கன்மம்
மாதாய்பிறப்பதுவே — துன்பம் துன்பம்
நல்ல—மலடியாயிருப்பதுவே — இன்பம் இன்பம் (போ)

பெற்றும்பெருமலடி யானேன் நானே எழு
பிள்ளைகளுக்கேயெமனுய் நானே நானே
உற்ருர் உறவினர்கள் வீணே வீணே
இந்த—ஒண்டோடியேன்பாக்கியமோ காணேன்காணேன் (போ)

எங்கும்நிறைந்தபர மேசா யீசா எனக்
கேதுக்கிந்தஜென்மம் சர் வேசா நேசா
சங்கேந்துமால்மகிழ்ப்ர காசா வாசா காரும்
சங்கரலிங்கன் தமிழ்க்ரு பேசா ஈசா (போ)

சீன் முடிவு. [கிணற்றில் விழுகிருள்]

## சீன்—11. இடம்—வீதி.

**நடிகர்:—நல்லண்ணன், வேடர்கள், காவலன்.**

நல். வ-ம்:—அடே வேடர்காள்! ஆரண்யவேட்டையை முடித்து அதிக சந்தோஷமாக அரண்மனை யடுத்து வந்துவிட்டோம். இது சமயம் எனக்கு என்றுமில்லா தின்று,

இராகம்-பிலஹரி, தாளம்-ரூபகம்.

பல்லவி

துற்குறிதோற்றுதே தோழா எந்தன்
தோள்கள் துடிக்குதே (துற்)

அநுபல்லவி

இக்குறிகாண்பதெதற்கோ தெரிகிலேன்
ஏக்கமேலானதே தூக்கமுங்காணுதே (துற்)

வ-ம்:—வேடர்காள்! நகர்ப்புறமடைந்ததுமுதல் என்னிருதோளும் துடிக்கிறது. புலால்நாற்றம் வீசுகிறது பயமதிகரிக்கிறது சோக மேலிடுகிறது இதென்னகாரணம் இவற்றை யோசிக்க,

சரணம் (ஷை மெட்டு)

குலசேகரி தங்கைக்குக் கேதேனும்நேர்ந்ததோ
துலகுங்காசிபதிக்குத் துன்பமேதுற்றதோ
பலருங்கொண்டாடுமென் பட்டணம்பாழாச்சோ
இலகுமிச் சகுனத்தால் யேதேதுநேருமோ (துற்)

வ-ம்:—எனதருமைத் தங்கை என் வீட்டைத் தேடிவந்த குலசேகரிக்குத்தான் ஏதேனும் தேகசுகமில்லையோ அல்லதெனது மைத்துனர் காசிபதிக் கேதாவது இக்கட்டு நேர்ந்ததோ என் அரண்மனையில் விளைந்த் ஆபத் தெதுவோ இன்னதென் றறியக்கூடவில்லை. சீக்கிரம் செல்வோம் வாருங்கள்.

[எதிரே காவலன் வருகிருன்]

காவ. வ-ம்:—பிரபு! அடியேன் நமஸ்காரம்.

நல்லண். வ-ம்:—கல்யாண். காவலா! ஏனித்தனை தூரம் வந்தது. அரண்மனையில் ஏதாவது விசேஷமுண்டோ.

காவ. வ-ம்:—அரசே! அதைத் தெரிவித்துப் போகவே தங்கள் வருகையறிந்து வோடோடியும் வந்தேன்.

நல்லண். வ-ம்:—காரணம் என்ன?

காவ. வ-ம்:—தங்கள் தங்கை குலசேகரி யம்மாள் தனது ஏழுபிள்ளை களையும் அழைத்துக்கொண்டு 12-வருஷமாக தங்கள் ஊரில் மழையில்லாததி நிமித்தம் மிகுந்த கஷ்டப்பட்டுப் பரதேசி கோலத்துடன் பதி வார்த்தையை மீறிக் கால்நடையாகவே நம் மூரைநாடிப் பஞ்சம் பிழைக்கவந்தார்கள். அவர்கள் வருவதைப் பார்த்த அலங்காரியம்மாள், அரண்மனைக் கதவுகளைச் சாத்தி விட்டுத் தலையில் பத்துபோட்டுக்கொண்டு குளிர்காச்சல் கண்ட வர்களைப்போல் பாசாங்கு செய்து படுத்துக்கொண்டார்கள்.

பிள்ளைகளுடன் வந்தவர்கள் அண்ணி அண்ணி என்று தலைவாசலில் நின்று ஜாமநேரம்வரை கூப்பிட்டும் கதவைத் திறக்கவில்லை. பிறகு அந்தம்மாள் தெய்வப் பிரார்த்தனை செய்ததும் கதவு தானாகவே திறந்தது. பிள்ளைகள் மாமி மாமி என்று கூப்பிட் டார்கள். அலங்காரியம்மா ளெழுந்து பிள்ளைகள் மாங்கனி, தேங்காய் முதலியவைகளை எடுத்துத் தின்பதைப் பார்த்து சவுக்காலடித்தும், கையாலறைந்தும் காலாலுதைத்தும், கண்டபடி பேசிக் காரியுமிழ்ந்து இங்கேனடி வந்தாயென்று தங் கள் தங்கையைக் கன்னத்தி விடித்தார்கள்.

குழந்தைகள் பசியைத் தீர்க்கவேண்டுமென்று கும்பிட்டார்கள். பொத்தல் பானையில் கேழ்வரகுமாவைக் கலக்கி கல்லடுப்பு கட்டி பச்சை வாழைமடலை வைத்து தீ மூட்டினார்கள். அடுப்பு எப் படி எரியும். உடனே குலசேகரி யம்மாள் ஈஸ்வரத் தியானம் செய்ததும் அடுப்புத் தீப்பற்றி எரிந்தது.

அந்தக் கூழையாவது குடிக்கக் கொடுமென்று கேட்டதற்கு கூழ்ப் பானையைத் தூக்கி அந்தம்மாள் தலைமேல்போட் டுடைத்து விரட்டியடித்துப் பிள்ளைகளுடன் வெளியில் துரத்தி விட்டார் கள். உடனே தங்களுக்குச் சொல்லி யனுப்பத் தோதில்லை. நமது அரண்மனை விஷயமும், அலங்காரியம்மாள் விஷயமும் இவ்வளவு தான்.

நல்லண். வ-ம்:—(யோசித்து) ஆ! இப்படியு மிருந்ததா என் வாழ்வு. இதுவும் காலவிதியா? இனி நான் என்ன செய்வது? தங்கை இப்போ தெங்கிருக்கின்றாள்,

காவ. வ-ம்:—இந்த ஊரிலில்லை. வேறெங்கு சென்றார்களோ தெரியாது.

நல்லண். வ-ம்:—நல்லது வா. (சீன் முடிவு)

## சீன்—12. இடம்-அரண்மனை.

நடிகர்:—அலங்காரி, நல்லண்ணன், காவலன்.

அலங்காரி. வ-ம்:—காவலா பிராணபதி வேட்டை முடித்துத் திரும்பி வருவதாகத் தூதர்கள் வந்த விஷயம் உண்மைதானா?

காவலன். வ-ம்:—அம்மா நேற்று மாலையே நகர்ப்புறம் வந்துவிட்டார். இது சமயம் இங்கு வரக்கூடும். (எதிர் நோக்கி) இதோ வந்துவிட்டாரம்மா.

அலங்காரி. வ-ம்:—காவலன் இங்கு நடந்த விஷயம் உம் தெரியுமா. ஜாக்கிரதை.

காவலன். வ-ம்:—ஜாக்ரதை செய்துவிட்டேனம்மணி அஜாக்ரதையாயிருக்க மாட்டேன். (நல்லண்ணன் வர)

அலங்காரி. வ-ம்:—நாதா நமஸ்காரம். இந்த ஆசனத் தமருங்கள்.

கவி

கானக வேட்டை யாடிக்
களைப்பிளைப் புடனே வந்தீர்
பானக நீர் மோருண்டு
பாங்குட னமரு வீரே.

வ-ம்:—பிராணேசா! வேட்டையாடிக் களைத்து வந்திருக்கிறீர்கள். பானகம் பருகி களைப்பார வாருங்கள்.

நல்லண். வ-ம்:—அலங்காரி வேட்டையில் நேர்ந்த களைப்பாறியே பின் னிங்குவந்தேன் அதிருக்கட்டும் கண்மணி,

### நல்லண்ணன் விருத்தம்

உந்தனைப்போ லெனக்கு
வுபசாரம் செய்வோர் யாவர்
சிந்தையான் மகிழ்ந்தேனெந்தன்
தேவியே சொல்லக்கேளாய்
எந்தநல் லருமைத்தங்கை
ஏழுமைந்தர்க ளுடனேயிங்கு
வந்ததாய்க் கேள்விப்பட்டேன்
வகையெனக் குரைசெய்வாயே.

## நல்லண்ணன் பாட்டு

இராகம்-மோகனம், தாளம்-ஆதி.

எங்கே யிங்குவந்த தங்கை எங்கே
எழுபிள்ளைகளுடன் பாழும்பஞ்சத்தால்வாடி
வந்ததங்கை எங்கே
இப்பொழுதே பார்க்கவேணும்
தப்பிதமில்லாமல் சொல்வாய்
வந்ததங்கை எங்கே
ஏங்கியேங்கிவனமதில் நடந்தோடி
பாங்குடனே யெந்தன் மனைதனைநாடி
வந்ததங்கை எங்கே

நல்லண். வ-ம்:—என்னருடைத் தங்கை குலசேகரி எங்கே. எப்பொழுது வந்தாள். பிள்ளைகளெங்கே. அலங்காரி, தங்கை எங்கிருக்கின்றாள். சீக்கிரம் தெரிவிப்பாய்.

அல. வ-ம்:—நாதா! என்ன அவசரம். நாத்தி வந்தது வுண்மைதான். ஆர அமரப் பார்க்கப்படாதா. அதற்குள்ளாக அவசரப்படுகிறீர்களே.

## நல்லண்ணன் அலங்காரி தர்க்கம்

(தித்திக்குஞ்செங்கரும்பே என்ற மெட்டு)

நல்லண். என்னுடன் பிறந்ததங்கை இங்குவந்தனளே அவ
ளெங்கு சென்றனளோ பெற்ற
எழுபிள்ளைகளோ டவளேயே
நானுங்கண்டிடவே சொல்லுவாய்
நானுங்கண்டிடவே

(ஷ மெட்டு)

அல. வந்துவுண்டு சயனிக்கிறார் மன்மததுரையே மையல்
விளக்குஞ் சற்கரையே இந்த
மாதென்னிடத்தில் வாதுகள் செய்ய
லாகுமோ துரையே கோப
மாகுமோ துரையே

நல்லண். அண்ணன் தங்கை எங்களைப்போ லாருமில்லையடி பிறந்
தோருமில்லையடி வளர்ந்
தோருமில்லையடி வந்த
தாலவளையே நேரில் கண்டிட
ஆவல்கொண்டேனடி அன்னமே
ஆவல்கொண்டேனடி

அல. வ-ம்:—நாதா! வந்தவள் உண்டிளைப்பாறி சயனிக்கிறாள். அந்தப்புறத்தில் சயனிப்பவளை பிறகு பார்த்தால் போகிறது. அதற்குள் அவசரப் படுகிறீர்களே.

நல்லண். வ-ம்:— அவர்களுக்கு வேண்டிய வுபசாரம் செய்தாயா? பிள்ளைகளுக்குத் தக்கபடி வேண்டும் பொருள்களைக் கொடுத்தாயா?

காவ. வ-ம்:—ஆ! ஆ! அரசே! பிள்ளைகள் ஏழுபேருக்கும் பட்டுபட்டு பட்டு பட்டுண்ணி பட்டு குடுத்தாங்க; அந்தம்மாளுக்கு போடு போடு போடுண்ணி தலைமேலே பானையைப் போட்டாங்க. அடாடா! என்ன வுபசாரம்; என்ன சமாச்சாரம் அத்தனையும் விசாரம்தான்.

அல. வ-ம்:—நாதா! சிறிதிப்படி அமர்ந்து நான் சொல்வதைக் கேளுங்கள்.

பாட்டு கண்ணிகள்

*எந்தநல் துரையே உந்தனல் தங்கை
வந்தனளே யேழு மைந்தருடன்
சிந்தை மகிழ்ந்து தெருவினில் சென்று
சொந்தமாய் நானுமே அழைத்து வந்தேன் (எந்)

நாத்திமைந்தரான மருமக்களேழ்வரையும்
பார்த்துமன மகிழ்ந்தன்புடனே
ஆத்திரமாகவே நேத்திரங்களித்து
ஆலஞ்சுத்தி திருஷ்டிகழித்தேனே (எந்)

கத்தரிக்காயுடன் கருணைப்புடலங்காய்
முத்தாமுருங்கக்காய் நான்சமைத்தேன்
தித்திக்கும்பச்சடி கூட்டமுதுதுவையல்
சித்தமகிழவே நானரைத்தேன் (எந்)

சின்னசம்பாஅரிசி அன்னஞ்சமைத்தேன்
பன்னும்பலகாரமிக அமைத்தேன்
நன்னயமாகவே பொன்னிலைபோட்டு
நாத்திக்குமைந்தருக்கும் நான்படைத்தேன் (எந்)

நாட்டமாயுன் தங்கை கேட்டபொருள்களெல்லாம்
வாட்டமில்லாமலே நான்கொடுத்தேன்
வீட்டினிலிருந்தாள் மைந்தர்களுடனே
வெளிசென்றதையும் நானறியேன் (எந்)

வ-ம்:—எல்லா வுபசாரமும் சரிவரச்செய்தேன் பிள்ளைகளுடனே வீட்டுக்குள்ளிருந்தாள் நானும் அந்தப்புறத்தில் சிறிதுவேலையா

* இப்பாடல் ஆலந்தூர் கம்பெனியார் பாடிவருவது.

யிருந்தேன் எங்குசென்றுளோ? எங்குபோயிருப்பாள் அக்கம் பக்கம் தன் ஆதி ஸ்நேகிதர்களைப்பார்க்கப் போயிருப்பாள் வருவாள் வருவாள் வருத்தப்படாம லிருங்கள்.

## நல்லண்ணன் பாட்டு

இராகம்-ஆரபி, தாளம்-ஆதி.

பல்லவி

* இத்தனைவுபசாரங்களினிதுடன் செய்திருந்தால்
இதைவிட்டுயேன்போராள் என்னுடை தங்கை
இதைவிட்டுயேன் போராள் (இத்)

அநுபல்லவி

சத்தியவதியைப்போல் சாதிக்கின்றுயடி
சண்டாளிமூளிநீதான் சதியதுசெய்தாயடி
உத்தமிஎன் தங்கைக்கு வஞ்சகம்புரிந்திட்ட
கத்தபமே போடி சீ சீ
கத்தமமே போடி (இத்)

சரணம்

பொல்லாங்கு செய்தாயே என்னிடம்
வில்லங்க மொழிந்தாயே
நல்லதங்கையுமக்கள் நானுதுயரமுற்று
நடந்தனரோஎங்கு நானறிகிலன்பாவி
வல்லமையாகப்பேசம் வார்த்தையெல்லாமறிவேன்
வஞ்சகக்காரி போடி சீ சீ
வஞ்சகக்காரி போடி (இத்)

நல்லண். வ-ம்:-என்னஜாலம் என்ன சாகசம். சண்டாளி. பெண்ணுய்ப் பிறந்த பிசாசே. உண்மையாக நீ தெரிவித்தபடி வுபசாரம் செய்திருந்தால் இவ்வீட்டைவிட்டு எங்கே போவார்கள். அலங்காரி மூளி அலங்காரி. என்னெதிரில் நில்லாதே. போ அப்புறம் துஷ்டையே.

அல. வ-ம்:—ஐயோ இதென்ன அநியாயம் ஆ. தெய்வமே. உனக்குக் கண்ணில்லையா. திக்கற்ற என்னை இப்படி இம்சிக்கின்றுர்களே இதுவுமென் தலைவிதியா

## அலங்காரி பாட்டு

நாமே முகம்மது என்ற மெட்டு

*பட்டபாடெல்லாம்போச்சே கெட்டகெடுவருக்கு
இட்டகைஇதுவாச்சே என்மன்னு

* இப்பாடல் ஆலந்தூர் கம்பெனியார் பாடிவருவது.

பட்டும்பயனில்லை இட்டும்பெயரில்லை
சுட்டாலும்தோஷமில்லை இந்தக்கையை
சுட்டாலும் தோஷமில்லை (பட்ட)

நாத்திவந்தாளென்று நேர்த்தியாயானுமே
பூர்த்தியாயுபசரித்தேன் என்மன்னு
க்ஷாத்திரமாகவே வேற்றிடம்சென்ருளோ
நேத்திரம்தெரியாதுகாண் என்மன்னு
நேத்திரம் தெரியாதுகாண் (பட்ட)

அல. வ-ம்:—பட்டும் பயனில்லை இட்டும் பெயரில்லை. வருவது வரட்டும். அலங்காரி கெட்டவள்தான். அதட்டிக் கேழ்க்க ஆளில்லையல்லவா தாங்கள் எப்படியும் பேசுவீர்கள்.

## நல்லண்ணன் விருத்தம்

சாதனை செய்பவர்க்குச் சத்தியம் பால்சோராகும்
பாதகிநீதான் பேசும் பசப்பெலா மறிவேன்நானே
தீதிலா தங்கைதன்னைத் தேடியே அழைத்துவந்து
காதகிவுனது வஞ்சக் கபடத்தை விலக்குவேனே.

வ-ம்:—நல்லதிருக்கட்டும். உனது பசப்பை இன்னும் சிறிது நேரத்தில் அறிகிறேன். தங்கையைத்தேடி அழைத்துவந் துன்னைப் பின்னென்ன செய்கிறேன் பார்.

அல. வ-ம்:—அழைத்து வாருங்கள். நேரில் வைத்து விசாரித்தால் நியாயம் விளங்குகிறது.

நல்லண். வ-ம்:—நல்லதப்படியே யாகட்டும். (போகிருன்.)

காவலன். வ-ம்:—அம்மா! தாங்கள் ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். சாக்ஷி சொல்ல நானிருக்கிறேன்.

அல. வ-ம்:—வரட்டும் பார்ப்போம். அலங்காரி இதற்கு பயப்பட்டவளா. (போகிருள்.)

(சீன் முடிவு.)

சீன்-13. இடம்-ஓர்வீதி.

நடிகர்:—நல்லண்ணன், பார்வதி, நாராயணி.

## நல்லண்ணன் பாட்டு

அண்டைஅசல் பெண்டுகளே
ஆச்சிமாரே தங்கைமாரே
என்பிறவி நல்லதங்கை

ஏழுமைந்தருடன் வந்ததுண்டா
கண்டிருந்தால் நீங்களெனக்குக்
கடுகவுரை செய்குவீரே

நல்லண். வ-ம்:—அம்மா! அயல் வீட்டுப் பெண்டுகளே? எனது சகோதரி நல்லதங்கை இங்கு வந்ததுண்டா. அல்லது இவ்வழியிற்போகக் கண்டதுண்டா. தயவு செய்து சொல்லக் கோருகிறேன்.

பார்வதி. வ-ம்:—ஐயா! அலங்காரி செய்த கொடுமை சகியாது குலசேகரியம்மாள் குழந்தைகளுடன் இவ்வழியாக வந்தார்கள். பார்த்துக் கூப்பிட்டோம்.

நாராயணி. வ-ம்:—எங்களால் வேண்டிய வுபசாரம் செய்து பிள்ளைகளுடன் பசியாறச் சொன்னோம். வேண்டாமென்றார்கள்.

பார். வ-ம்:—தாங்கள் வருகிறவரையாவது இருக்கும்படி தெரிவித்தோம். தாங்கள் வந்தால் விஷயத்தை சொல்லிவிடுங்களென்று இவ்வழியாக நடந்துவிட்டார்கள்.

நல்லண். வ-ம்:—ஆ தங்கா குலசேகரி! நீ வரும் சமயம்தானா நான் வேட்டைக்குப் போகவேண்டும். ஐயோ என்செய்வேன்.

[போகிறான்]

(சீன்முடிவு)

## சீன்—14. இடம்-கானகம்.

**நடிகர்:—நல்லண்ணன், ராமக்கோனான், வளந்தக்கோனான், கருப்பக்கோனான்.**

### நல்லண்ணன் விருத்தம்

சேயர்களேழுவரோடு சிந்தையே மிகவருந்திக்
காயுமோர் வேனல்வாட்டக் கால்நடையாக வந்த
தாயில்லா பிள்ளையாமென் தங்கையை இங்கேநிற்கும்
ஆயர்காள் கண்டதுண்டோ அதையெனக் கறிவிப்பீரே.

ராம. வ-ம்:—டே கருப்பக்கோனான்! என்னடா எய்வு இவரு சொல்ரதைக் கேள்ரா.

கரு. வ-ம்:—ஏவிலே வளந்தப்பயலே! கேட்டுத் தொலையுங்கிறேன்.

வள. வ-ம்:—மவராசா! என்ன கேக்ரிங்கோ ஆட்டுப்பால் வேணுமா? பள்ளாடு வேணுமா? வெள்ளாடு வேணுமா?

நல். வ-ம்:—பாலும் வேண்டாம் ஆடும் வேண்டாம் நான் சொல்வதை நன்றாய் கவனியுங்கள்.

பாட்டு கண்ணிகள்

* இங்கு ஆடுமேய்க்கு மைந்தர்காள்
என்னருந் தங்கையைக் கண்டீரா (இங்)

தங்கையுடன் ஏழு மைந்தர்கள்
தனிவழியாய் வரப் பார்த்தீரா (இங்)

காடுமலை எங்கும் தேடினேன்
காணாமல் நான் மிகவாடினேன் (இங்)

நாடுநகர மெங்கும் தேடினேன்
நல்லதங்கையை எங்குங் காண்கிலேன் (இங்)

வ-ம்:—அப்பா இடையர்களே! எனது தங்கை குலசேகரி ஏழுபிள்ளைகளுடன் இவ்வழியாய் வரப்பார்த்தீர்களா?

வள. வ-ம்:—ஓ ஹோ! அவுங்களா கொயிந்திங்களோடு ஓரம்மா வந்தாங்க

கருப். வ-ம். தாகம் தவிக்குது தண்ணிகுடுங்க இண்ணிகேட்டாவ;

ராம. வ-ம்:—ஆட்டுப்பால் தாரோமிண்ணோம் அதுவேண்டாமென்று கெணறு இருக்குமிடம் கேட்டாவ;

நல். வ-ம்:—ஐயோ! பிறகு கிணறு காட்டினீர்களா?

வள. வ-ம்:—அதோ தெரியுது பாருங்க அந்தக் கெணறைக் காட்டினோம் போயிட்டாங்க.

நல். வ-ம்:—ஆ ஆ அம்மா! குலசேகரி! குலசேகரி! தங்கா! என்னருமைத் தங்கா! [அழுதவண்ணம் போகிறான்]

(சீன் முடிவு.)

சீன்—15. இடம்-கானகம், கிணறு.

நடிகர்:—நல்லண்ணன்.

## நல்லண்ணன் பாட்டு

(சின்னவயதிலிந்தவாதை என்ற மெட்டு)

இந்தவனம்தனிலே தேடி நான்
ஏங்கலானேன் மனம் வாடி
அந்தழுளியால் அழுதோடி தங்கை
ஆவிமடிந்தனளோ வாடி

* இப்பாடல் ஆலந்தூர் கம்பெனியார் பாடிவருவது.

அந்தோஇதற் கென்செய்வேன்
ஆரிடம்போ யுரைப்பேன்
அந்தக்காசிப னறிந்தாலே என்னை
அவமதிப்பாரே புவிமேலே

நல்லண். வ-ம்:—ஐயோ தெய்வமே இதுவும் நின் திருவிளையாடலா கிணற்றை நாடிச்சென்ற தங்கை ஆவிமடிந்தனளோ. அல்லது வேறெங்கு சென்றனளோ பாலர்களைப் பார்க்கக் கொடுத்து வைக்காத பாவியானேனே. (உற்றுப்பார்த்து)

ஆ! அதோ எதிரில் தோன்றுவ தென்ன. ஐயோ ஐயோ. (ஆபரணங்களைக் கண்டு) தங்கா குலசேகரி. இவையனைத்தும் உன்னுடைய ஆபரணங்க ளன்றோ அம்மா அம்மா.

## நல்லண்ணன் பாட்டு

### (எங்குதான் சென்றனளோ என்ற மெட்டு)

ஆபரணங்கள் கண்டேன் அடங்
காததுயரங் கொண்டேன்
பாவி யலங்காரியால்
பதைத்து வெளியில்வந்த
பாவை என்னரும் ஆவியாந்தங்கை
தானணிந்திடும் பேர்துலங்கிடும் (ஆப)

சண்டாளி மூளிசெய்த
சதியால் மனங் கலங்கி
தாவியேயிங்கு வோடியேவந்து
பாலர்தம்முடன் மாண்டனளோதான் (ஆப)

தங்கையணிந்திருந்ததாவியிதோ தோணுது
சாக்ஷியாமிது சூக்ஷிதானிது
மாக்ஷியாய்வந்த காக்ஷிதங்கையின் (ஆப)

நல்லண். வ-ம்:—இது என் தங்கையின் மாங்கல்யமல்லவா. இங்கே தமையன் தேடிவருவானென்னும் அடையாளத்துக்காகக் கழட்டி வைத்தனளோ. சாகும்போதும் சண்டாளனை என்னை நினைந்தாயோ தங்கா தங்கா

[கிணற்றில் பார்த்துவிட்டு
ஆ என்று கீழ்விழுந்து]

## நல்லண்ணன் பாட்டு

### (ஆ என் ஜானகி என்ற மெட்டு)

ஆஎன்நல்லதங்கா ஐயோஎன்நல்லதங்கா
அநியாயமாய்மாண்டாயோ அம்மா அம்மா அம்மா

ஓஹோநானென்னசெய்வேன் உலகிலெவ்வாறுய்வேன்
உன்னைஎப்போதுகாண்பேன் தங்கா தங்கா தங்கா

நல்லண். வ-ம்:—ஆ தங்கா குலசேகரி. விவாகம்செய்து கொடுத்த நாளாக என் வீட்டைத்தேடி வராமலிருந்தவள் பஞ்சம் பிழைக்க வரலாமா வீணனபழிக்கென்னை ஆளாக்கிவிட்டுப் பாழுங்கிணற்றில் வீழ்ந்து மடியலாமா அலங்காரிகொடுமை செய்தால்தானென்ன நான் வரும்வரையில் அயல்வீட்டுப் பெண்களிடம் இருக்கப்படாதா குலசேகரி குலசேகரி

[எழுந்து கிணற்றைப்பார்த்து]

## நல்லண்ணன் பாட்டு

(பூசுங் களபஞ்சேர்க்க என்ற மெட்டு)

அறுபதுமுழங்கூந்தல் அலையுதேஜலந்தன்னில்
ஐயோநீமடிந்தாயோதங்கா அருமைத்தங்கா (அறு)

பழிகாரனுனேனே பாரிலெனைநகைக்க
பாழ்கிணற்றில்விழவோவந்தாய் ஆவிமடிந்தாய் (அறு)

உனக்கொருகுறைநானே உலகில்செய்தறியேனே
உத்தமிநீயேனேமடிந்தாய் என்னைமறந்தாய் (அறு)

[சிறிது மவுனமாய் நின்றுபின்]

நல்லண். வ-ம்:—நல்லது. எல்லாம் ஈசன் கிருபைபோல் நடந்துவிட்டது சும்மா புலம்பிக்கொண்டிருப்பதில் பலனில்லை. பிரேதங்களை எடுத்து தகனம் செய்துவிட்டு மேல் நடக்கவேண்டியதை யோசிப்போம்.

[கிணற்றிலிறங்கி ஓர் குழந்தையை தூக்கி வருகிறான் சீன் விட்டு மற்ற பிரேதங்களை எடுத்துக் கிடத்திவிட்டு]

## நல்லண்ணன் பாட்டு

(ஐயையோ தந்தையே என்ற மெட்டு)

* குடியிற்பிறந்தகுயிலே காசிராஜன்
முடியிற்சிறந்த முழுமணியேயிப்
படிநீமாளலாகுமா எனையிப் படியேவிடலாகுமா
பாவிநானே ஆகினேனே எதுசெய்வேன்
பார்புகழ் நல்லதங்கா

நல்லண். வ-ம்:—குடியிற்பிறந்த குலமணியே. காசிமகாராஜன் முடியிற் சிறந்த முழுமணியே அம்மா குலசேகரி. சில தினங்களுக்கு முன்பாக நான்

* இப்பாடல் உ. மு. கவிராயரவர்கள் எழுதியது.

## நல்லண்ணன் பாட்டு

(ஷை மெட்டு)

கண்டகனுவும் பலித்துதே நானந்தக்
காலத்திலேயிதைமே விட்டுச்சொல்ல
பெண்டாட்டிநம்பயில்லை பிறகு உண்டாச்சுதிந்தமெதால்லை
கண்மணியே விண்மணியே எதுசெய்வேன்
கலங்கவிட்டாயே தங்கா

நல்லண். வ-ம்:—அன்றிரவு கனவுகண்ட பலன் கைமேற் பலித்ததே தைரியங்கூறிய அலங்காரியே என்னை இவ்வித ஆபத்துக்குள்ளாக்கினளே அம்மா குலசேகரி.

## நல்லண்ணன் பாட்டு

(ஷை மெட்டு)

மாலையிட்டபதி நாளைவந்துசொந்த
மங்கையெங்கேயென்று சங்கதிகேட்கும்
வேளையிலேது சொல்வேன் காணும்
வேளையிலெங் கொளிப்பேன்
மன்னன் நானே என்ன செய்வேன் என்னையவ
மானம் செய்தாயே தங்கா

நல்லண். வ-ம்:—உன்னை மாலைசூடிய மன்னன் நாளை வந்தென்னை எங்கே என்மனைவி மைந்தரென்று கேட்டால் என்ன பதில் சொல்லுவேன். என்ன தேறுதலுரைப்பேன். (யோசித்து) நல்லது அழுதாற் பயனென்ன. நொந்தாற் பயனென்ன ஆவதில்லை. தொழுதாற் பயனென்ன நம்மையொருவர் சுடவுரைத்த பழுதாற் பயனென்ன நன்மையுந் தீமையும் பங்கயத்தோன் எழுதாப்படி வருமோ எல்லாம் தெய்வ கட்டளையால் ஏற்பட்டுவிட்டது. இவர்களைத் தகனம் செய்துவிட்டு அலங்காரியைப் பழிக்குப்பழி வாங்கவேண்டும்.

[உட்சென்று கட்டை விறட்டிகளைக் கொண்டு வந்து பிரேதங்கள்மேல் வைத்து தீ இடுகிறான். தீ பிடிக்காதது கண்டு]

## அகவல் (முகாரி ராகம்)

நெருப்பும்பிடிக்கவில்லை நீருய்ச்சமையவில்லை
அக்கினியும்பிடிக்கவில்லை அனலாயெரியவில்லை
ஏனம்மா தங்கையரே இத்தனைக்கோபமுனக்கு
பற்றியெரிந்தாயானால் பழிகளைவாங்கிடுவேன்

ஓங்கியெரிவாயாகில் உயிர்களை வாங்கிடுவேன்
நானும்மடிந்திடுவேன் நாடியுன்பின்வந்திடுவேன்
குப்பென்றுதீயெழும்பி குலமணியேஎரிந்திடம்மா

## நல்லண்ணன் பாட்டு

(பாவி யணையவாரான் என்ற மெட்டு)

பற்றியெரியுமம்மா என் தங்கையே
பழிகளை வாங்கிடுவேன் என் தங்கையே
ஓங்கியெரியுமம்மா என் தங்கையே
உயிர்களை வாங்கிடுவேன் என் தங்கையே

[உட்போக] (சீன் முடிவு)

## சீன்—15. இடம்-அரண்மனை.

நடிகர்:—அலங்காரி, நல்லண்ணன், காவலன், தச்சன்.

அல. வ-ம்:—நாதா! எங்கே தங்கையைத் தேடி அழைத்து வந்தீர்களா?

நல்லண். வ-ம்:--எங்கெங்கு தேடுவது அவளது தரித்திர தசையானது இவ்விடத்தில் தங்கியிருக்கும் பாக்கியமும் அவளுக் கில்லாது போனது. அதற்கு நாமென்ன செய்யலாம். அலைந்து திரிந்து அலுத்து வந்துவிட்டேன்.

அல. வ-ம்:—நல்லது வாருங்கள் அந்தப்புறம் போகலாம்.

[காவலன் வெளிவந்து]

காவ. வ-ம்:—பிரபு! நமஸ்காரம்; தங்கள் குமாரர் இரண்டு மூன்று நாளாக அன்னபானுதியின்றி மெத்த விசனத்தி லிருக்கிறார். விளையாட்டாகவே விஷயத்தை விசாரித்தறிந்தேன். விவாகம் செய்துகொள்ள வேண்டுகிறார்.

அல. வ-ம்:—பிள்ளையினுடைய குணமறிந்து நானும் பிரதி தினமும் சொல்லிக்கொண்டுதான் வருகிறேன். தாங்கள் பார்க்கலாம் பார்க்கலாமென்று நாளைக் கடத்துகின்றீர்கள். இருப்பது ஒரு பிள்ளை காலாகாலத்தி லதற்கு கலியாணம்செய்து பார்த்தாலென்ன.

நல். வ-ம்:—காதலி! எதற்கும் வேளைவேண்டு மல்லவா? நல்லது உனது தமையன் மகள் இருக்கிறாள். அவளையே பேசி முடித்துவிடலாம். அலங்காரி நீ சென்று விவாகத்துக்கு ஆக வேண்டிய வேலைகளை விரைவில் பார்; இன்றெட்டாவது நாளில் முகூர்த்தத்துக் காகவேண்டிய காரியங்களை நானும் தயார் செய்கிறேன்.

[அலங்காரி போகிறாள்]

நல். வ-ம்:—அடே காவலா! உடனே சென்று அரண்மனை வேலைக் காரனான தச்சனை இங்கழைத்து வா.

[காவலன் உட்சென்று தச்சனுடன் வருகிறான்]

தச். வ-ம்:—நமஸ்காரம்; சமுகம் அழைத்த காரணம் யாதோ.

நல். வ-ம்:—ஆச்சாரியாரே! எனது குமாரனுக்குத் திருமணம்செய்ய யோசித்திருக்கிறேன். அத்துடன் அலங்காரியின் பந்துஜனங்களனைவரையும் எமனுலக கனுப்பவும் யோசித்தேன். ஏன் அவள் என் தங்கையைக் கொன்ற பழிக்குப்பழியும் அவமானத்துக் கவமானமும் செய்யவேண்டு மல்லவா? ஆதலின் யாவரும் பார்த்துப் புகழும்படியான சூஸ்திரப்பந்தலொன்று தயார் செய்யவேண்டும். அலங்காரியின் பந்துக்களனைவரும் அதிலமர்ந்து பந்திபோஜனம் செய்யும் சமயம் பந்தல் இடிந்து விழுந்து யாவரும் மடியும்வண்ணம் ஓர் விசித்ரப்பந்தல் நிரூபிக்கின்றீரா?

தச். வ-ம்:—ஆஹா! அடியேனது வேலைப்பாடுகள் தாமறிந்ததுதானே. இஷ்டப்படி செய்து முடிக்கிறேன்.

நல். வ-ம்:—நல்லது விஷயம் வெளிவரக்கூடாது ஞாபகமிருக்கட்டும், அடே காவலா! கஜானாதிகாரிகளிடம் தெரிவித்து இவனுக்கு வேண்டிய திரவியங்களைக் கொடுத்தனுப்பு. [போகின்றனர்]

(சீன் முடிவு)

**சீன்-16. இடம்-கல்யாணமண்டபம்.**

**நடிகர்:—அலங்காரி, நல்லண்ணன், காவலன், மணமகன், மணமகள், பந்துஜனங்கள், பரியாரி, வண்ணான், தோழிகள்.**

[நல்லண்ணன் பந்துக்கள் ஒருபுறமும், அலங்காரி பந்துக்களும், பிள்ளையும் பெண்ணும் மற்றொரு பக்கமும், அமர்ந்திருக்கின்றனர். விவாகமாகிறது. நல்லண்ணன் பந்துக்களுக்கு அகத்திக்கீரை சாதமும், அலங்காரி பந்துக்களுக்குப் பதார்த்தவகைகளுடன் சாதம் பரிமாறுகின்றனர். பந்தல் இடிந்து விழுகிறது. அலங்காரி ஐயோ ஐயோ என்று வயிற்றி லடித்துக்கொள்கிறாள். நல்லண்ணன் அலங்காரியின் சிகையைப் பிடித்துக் கொண்டு]

## நல்லண்ணன் பாட்டு

பல்லவி

அடிபோடி குடிகேடி நிர்மூடி
பழி தேடிவைத்தவளே

அநுபல்லவி

படியிலென் தங்கைக்குப் பங்கம் விளைத்திட்ட
பாதகியே கொடுங் காதகியே(போடி)

சரணம்

மூதேவிமூளியை மொட்டையடித்து
முகத்தில் செகப்புக் கருப்புமிட்டு
மூதேவிவாகன மீதினிலேற்றி
முச்சந்தி வீதியி லக்ஷணங்காட்டி(போ)

நல்லண். வ-ம்:—சண்டாளி மூளியலங்காரி! என்னருமைத் தங்கையை அவமானப்படுத்தி ஏழு பிள்ளைகளுடன் மடிந்துவிடச் செய்த மாபாவி. பழிக்குப்பழி வாங்கினேன் பார்த்தனையா. அடே காவலா ஊருக்குள் சென்று வண்ணான் பரியாரியை அழைத்து வா.

அல. வ-ம்:—வண்ணானும் பரியாரியும் எதற்கு.

நல்லண். வ-ம்:—உன்னை மொட்டை யடித்து மூன்றாய் வகுத்து அழகு செய்வதற்குத்தான்.

[வண்ணான் பரியாரி வருகின்றனர்.]

நல்லண். வ-ம்:—அடே! இம்மூளியலங்காரியை மொட்டை யடித்து முகத்தில் கரும்புள்ளி செம்புள்ளி குத்தி கழுதைமேலேற்றி ஊர்கோலம் செய்வித்து கொலையாளிகளிடம் சொல்லி சுண்ணாம்பு காளவாயில் போட்டு வேகவைத்துக் கொல்லுங்கள்.

அலங். வ-ம்:—தெய்வமே! இந்தப் பாவியைப்போல் புருஷனும் உலகிலிருப்பானா. ஊரில் வருவது இவனுக்கு வாராதா.

நல்லண். வ-ம்:—வந்தால் வரட்டும் போடி. வாயாடி.

பரி. வ-ம்:—அம்மா வாங்கம்மா. நம்முடைய வேலையைப் பார்த்துக் கூலி கொடுங்கம்மா.

வண்ணான். வ-ம்:—தாயே தயவு செய்யணும். நம்மகழுதை தங்களைப்போன்ற குணமுள்ள கழுதைதான். உதைத்தாலும் உதைக்கும் என்மேல் கோபிக்கக்கூடாது.

அலங். வ-ம்:—சகோதரிகளே என் சரித்திரத்தையும் என் கெதியையும் பார்த்தீர்களா ஜாக்கிரதையா யுலகில் வாழுங்கள்.

(சீன் முடிவு.)

சீன்-17. இடம்-தர்பார்.

நடிகர்:—காசிராஜன், மந்திரி, குடிகள், சேவகன்.

## காசிராஜன் விருத்தம்

மேகமானது பொழிந்து மேன்மையாம் பயிர்விளைந்து
சோகமேவிலகிப் பஞ்சந் தொலைந்தன சுபிக்ஷமாகி
ஆகம வேதியர்க்கும் அதிதிகள்யாவருக்கும்
ஏகமாய் தானஞ்செய்வீ ரிதுததி மந்த்ரிமாரே.

காசி. வ-ம்:—மந்திரி பரம்பொருளாம் பரமேஸ்வரனின் கிருபாகடாக்ஷத்தால் மழை பொழிந்து பயிர்கள் விளைந்து பஞ்சம் நீங்கி தேசம் பிரகாசமானது. அயல்தேசம் சென்ற குடி மகாஜனங்களும் நம்நகர்க்கு வந்துசேர்ந்து விட்டனர். தேவாலயங்களைத் திறந்து திருவிழாமுதலிய வைபவங்களை நடத்தி அந்தணர் முதலிய அதிதி பரதேசிகட்குச் சகலதானமும் சரிவரக் கொடுங்கள்.

மந்திரி. வ-ம்:—சித்தப்படி செய்து முடிக்கிறோம்.

[குடிகள் உள்ளிருந்தபடியே]

குடிகள். வ-ம்:—அரசே வந்தனம். சமுகப்பேட்டிக்கு உத்திரவாக வேண்டும்.

காசி. வ-ம்:—மந்திரியா தர்பாரை நாடி குடி மகாஜனங்கள் வந்தாற் போற் தெரிகிறது. அழைத்து வாருங்கள்.

[மந்திரி உட்சென்று குடிகளுடன் வர
குடிஜனங்கள் வணங்கி நமஸ்கரித்து]

## குடிகள் பாட்டு

(மாதபாகமானவா என்ற மெட்டு)

தேசராஜபூஜிதா பூஜிதாமங்களம்
ஸ்ரீ சிவநாதனருள் சேர்ந்து வாழ்வாய் சந்ததம்
தேவ தேவர்போல் தீர்க்கமாய்
வாழ்குவாய் சுபம்

காசிராஜன். வ-ம்:—பிரஜைகள் எல்லோருக்கும் ஆசீர்வாதம். தர்பாரை நாடிவந்த காரணம் யாது.

குடி. வ-ம்:—அரசே தெய்வானுகூலத்தால் நமது ராஜ்ஜியம் பழைய செல்வாக்கை யடைந்தது. எங்களுக்கு யாதொரு குறைவுமில்லை. ஆயினும் மகாராஜா தங்கள் மைத்துனர் வீட்டை நாடிச் சென்ற எங்கள் அரசி குலசேகரியம்மாளையும் குழந்தைகளையும் தாங்கள் இங்கு வரவழைத்து சதிபதிகளாக ராஜதெரிசனம் கொடுக்கக் கோருகிறோம்.

காசி. வ-ம்:—பிரஜைகாள்! பஞ்சத்தின்போது என்னை பாதவிக்க விட்டுத் தன் தமையன் வீட்டைத் தேடிச் சென்ற அவளை அழைக்கப் பிரியமில்லை. ஆயினும், உங்கள் அன்பைக்கருதியும் எனது பிள்ளைகளின் ஆவலைக் கோரியும் நான்சென் றழைத்து வருகிறேன், நீங்கள் சந்தோஷமாக விடைபெற்றுக்கொள்ளலாம்.

குடி. வ-ம்:—சந்தோஷம். சென்று வருகிறோம்.

[குடிகள் போகின்றனர்]

காசி. வ-ம்:—மந்திரியா! மதுரைமா நகர்க்கேகி எனது மனைவி மைந்தரை அழைத்து வருகிறேன். வரும்வரையில் தர்பாரை கவனிததுக் கொள்ளுங்கள்.

மந். வ-ம்:—உத்திரவின்படி உறுதியாய் நடப்போம்.

(சீன் முடிவு)

## சீன்-18. இடம்-அரண்மனை.

நடிகர்:—நல்லண்ணன், காசிராஜன்.

[நல்லண்ணன் சோகத்துடன் வீற்றிருக்கக் காசிராஜன் வந்து பார்த்து]

காசி. வ-ம்:—என்ன விபரீதம்! மைத்துனர் முகம் வேறுபட்டு சோகத்துடன் விற்றிருக்கின்றார். குலசேகரி, குழந்தைகள் யாவரையும் காணோம். அரண்மனை நிர்சப்தமா யிருக்கிறது. ஆ மைத்துனரே!

### தர்க்கம்

(ஐபரியாத என்ற மெட்டு)

| | | |
|---|---|---|
| காசி. | மைத்துனரே | இங்குயெந்தன் |
| | மனைவிவந்தா | ளெங்குகாணேன் |
| நல். | மைத்துனரே | வுன்மனைவி |
| | மாண்டுவெகு | காலமாச்சு |
| காசிரா. | பரியாசம் | செய்கின்றீரோ |
| | பக்ஷமுள்ள | மைத்துனரே |
| நல்லண். | உண்மையாய் | சொல்லுகிறேன் |
| | உன்மனைவி | மாண்டுவிட்டாள் |
| காசிரா. | மனைவியு | மாண்டுவிட்டால் |
| | மைந்தரெழுவ | ரெங்குகாணேன் |
| நல்லண். | சங்கரன் | சாக்ஷியாயுந்தன் |
| | தனையர்களு | மாண்டுவிட்டார் |

நல்லண். வ-ம்:—மைத்துனரே! எனது மனைவி அலங்காரிசெய்த கொடுமைக்காற்ருது குலசேகரி தன் குழந்தைகளுடன் கிணற்றில் விழுந்திறந்தாள் அலங்காரியைக்கொன்று பழிக்குப்பழி வாங்கித் தங்கள் வரவை நாடியே காத்திருக்கிறேன்.

[காசிராஜன் கீழ்விழுந்தழுதல்]

## காசிராஜன் பாட்டு

(மாதவங்கள் செய்து பெற்ற என்ற மெட்டு)

ஒருவரிருவ — ரென்ருல்
உலகத்துக் — கேற்றபடி
எழுவருமேமாண்டா — ரென்ருல்
என்னசெய்வேன் — ஈஸ்வரனே (ஒருவ)

பஞ்சத்தை — போக்கிடவந்த
பாலரும் — என்பாவைதானும்
சஞ்சலத் — துடனிறக்க
தர்மமோஇது — கர்மமோ

காசி. வ-ம்:—ஐயோ தெய்வமே இதுவு முன் சோதனையா. பஞ்சம் பிழைக்கவந்தவர்கள் பாழுங்கிணற்றில் விழுந்து மடிந்தனரே. இனி என்செய்வேன். எனது மனைவிமைந்தருக்குப் பின் நானிவ்வுலகிலிருந்தென்ன பலன். (எழுந்து) மைத்துனரே இனி நான் உயிர் வாழ்வது கடினம் குலசேகரியைத் தகனம் செய்த இடத்தையாவது காண்பியும் அவ்விடத்திலேயே எனது பிராணனைப்போக்கிக் கொள்கிறேன்.

[இருவரும் போகின்றனர்]

(சீன் முடிவு)

**சீன்—19.** **இடம்-கானகம்.**

**நடிகர்:—நல்லண்ணன், காசிராஜன், குலசேகரி, ஏழுபிள்ளைகள், காசிராஜன்.**

நல்லண். வ-ம்:—இக் கிணற்றில்தான் பிள்ளைகளுடன் விழுந்திறந்தாள். இங்குதான் அவர்களைத் தகனம் செய்தேன்.

காசி. வ-ம்:—நல்லது என் வார்த்தையைத் தடுத்து வந்ததின்பலனை அவள் அனுபவித்துவிட்டாள். இனி அதைக்குறித்துப் பேசுவதில் பலனில்லை அவர்களைவிட என்னுயிர் பெரிதல்ல. இதோ நானும் மடிகிறேன்.

[கத்தியால் கழுத்தை வெட்டிக்கொண் டிறக்கிருன்]

நல். வ-ம்:—ஆஹா! என்னே ஒரு பெண்ணால் விளைந்த துன்பம். இப்படியு மிருக்கிறதா வுலகம் (யோசித்து) சரி; இனி இவ்வுலகில் நமக்கென்ன வேலை நாமும் இறப்பதே நலம்.

[கத்தியால் கழுத்தை வெட்டிக் கொள்ளுஞ் சமயம் ஈஸ்வரன் பிராப்தம்]

ஈஸ்வரன். வ-ம்:—பக்தா! பொறுப்பாய். இவ்வளவிற்குங் காரணம் நமது திருவிளையாட லன்றி வேறில்லை. உனது சகோதர வாஞ்சை உலகறியவே இவ்வண்ணம் செய்து முடித்தோம். இதோ நினது மைத்துனர்முதல் சகலரும் உயிர்பெற் றெழச் செய்தோம்.

[எல்லோரு மெழுந்து ஈஸ்வரனை வணங்குகின்றனர்]

ஈஸ். வ-ம்:—காசிபதி! உனது மனைவியின் பெயர் இந் நிலமெங்கும் உலவவும், சகலரும் அவளைத் தெய்வம்போல் வணங்கி வரவும் கிருபை பாலித்தோம். அலங்காரியின் ஞாபகார்த்தமாக எல்லைக்கல்லா யிருந்துவரவும் வரமளித்தோம். நீங்கள் சிலகாலம் உலகில் வாழ்ந்து முடிவில் மோக்ஷ சாம்பிராஜ்யம் பெறுவீராக. சுபம்! சுபம்.!! சுபம்!!! [எல்லோரும் பாடுதல்]

பாட்டு

ஆனந்தச் சோபனமே தானன்புக்கே மனமே
ஆலிங்கனஸ்தாபனமே மேலுங் கண்டோமுனமே

ஆரம்பம் பாரெங்கும் ஆணும்பெண்ணுந்தான்
சேரும்பண் பேகொண்டுந் தோணுங் கண்ணுந்தான்

அதிமதுரிதரகசிய முண்டாருக்குத்தான்
பொதுவிதி யிதுமதி பேசும் பேருக்குத்தான்

ஆழுத்தி நூலுக்கிதே செப்புமே
ஒழுந்திச் சாஷிக்குளே ஒப்புமே (ஆ)

சுபம்! சுபம்!! சுபம்!!!

முற்றுப்பெற்றது.

---

திருமகள் விலாசம் பிரஸ், சென்னை;—1932.